ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய கொள்கைக் கையேடு

கொள்கை வகுப்பாளர்களுக்கும்,
செயல்படுத்துபவர்களுக்குமான
ஓர் அறிமுகக் கையேடு

The Bali Process

ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றம் பற்றிய பாலி செயல்முறை (பாலி செயல்முறை) 2002-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஒரு தன்னிச்சையான மற்றும் பிணைப்பு எதுவும் இல்லாத மண்டல ஆலோசனைச் செயல்முறையாகும். இது ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேசிய அரசுகளின் இணைத்தலைமையுடன், 45 உறுப்பினர் நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் உள்ளது.

இந்த கொள்கைக் கையேட்டைப் பற்றிய கேள்விகளை பாலி செயல்முறையின் மண்டல சார்பு அலுவலகத்துக்கு (RSO) பின்வரும் முகவரியில் அனுப்ப வேண்டும்:

மின்னஞ்சல்: info@rso.baliprocess.net RSO இணையதளம்:
http://www.baliprocess.net/regional-support-office

2015 மே மாதம் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்புரை

இந்த கொள்கைக் கையேடானது பாலி செயல்முறை உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டு, மண்டல ஆதரவு அலுவலத்தினால் ஆதரவளிக்கப்பட்டு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட பாலி செயல்முறை கொள்கைக் கையேடுகள் வரைவுக்குழுவினால் வழிநடத்தப்படுகிறது:

லாலு முகமது இக்பால் (Lalu Muhamad Iqbal),
இந்தோனேசிய குடிமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்ட நிறுவனங்களின் நடப்பு இயக்குநர், வெளிவிவகார அமைச்சகம், இந்தோனேசியா (இணைத் தலைமை)

ஜோனதன் மார்டன்ஸ் (Jonathan Martens),
புலம்பெயர்ந்தோர் உதவிப் பிரிவின் தலைவர், ஆசிய-பசிபிக் மண்டல அலுவலகம், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (இணைத் தலைமை)

மேகன் சால்மர்ஸ் (Megan Chalmers),
மூத்த சட்ட அதிகாரி,
மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கான பிரிவு,
அட்டார்னி ஜெனரல் திணைக்களம், ஆஸ்திரேலியா

முகமது ஷிஃபான் (Mohamed Shifan),
உதவி தலைமை குடிவரவு அதிகாரி, குடிவரவு மற்றும் குடிஅகல்வு திணைக்களம், மாலத்தீவு

ராபர்ட் லார்கா (Robert Larga),
உரிமம் மற்றும் ஒழுங்குமுறைக்கான இயக்குநர், பிலிப்பைன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிர்வாகம், பிலிப்பைன்ஸ்

பின்திப் லீலாகிரியங்சாக் ஸ்ரிஸனிட் (Pinthip Leelakriangsak Srisanit),
அரசு வழக்கறிஞர்,
சர்வதேச விவகாரத்துறை,
அட்டார்னி ஜெனரல் அலுவலகம்,தாய்லாந்து

வரைவுக் குழுவுக்குக் கூடுதல் ஆதரவு தருவது:
டிம் ஹோ (Tim Howe),
புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) செயல்திட்ட ஒருங்கிணைப்பாளர், மண்டல ஆதரவு அலுவலகம்

The Bali Process

முன்னுரை

2002-இல் இது தொடங்கப்பட்ட நாள்முதல், ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றம் பற்றிய பாலி செயல்முறையானது (பாலி செயல்முறை) ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றத்தின் பின்விளைவுகளைப் பற்றிய பிராந்திய விழிப்புணர்வைத் திறம்பட எழுப்பியுள்ளது. அத்துடன் அதன் பிரதிபலிப்பாக உத்திகளையும், செய்முறை ஒத்துழைப்பையும் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. 48 உறுப்பு நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் அத்துடன் பல பார்வையாளர் நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இந்த தன்னார்வக் கருத்துக்களத்தில் பங்கேற்கின்றன.

ஆர்வமுள்ள உறுப்பினர்களின் ஆலோசனையுடன், பாலி செயல்முறையின் மண்டல ஆதரவு அலுவலகத்தால் (RSO) உருவாக்கப்பட்ட, கடத்தப்பட்ட நபர்களை அடையாளம் காண்பதிலும், பாதுகாப்பதிலும் உள்ள பிரச்சினைகள் பற்றிய கொள்கைக் கையேடுகளின் தொகுப்பை பாலி செயல்முறையின் எட்டாவது தற்காலிகக் கூட்டத்தில் மூத்த அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளார்கள். இதே வழியில் மேலும், கொள்கைக் கையேடுகளை வரைவு செய்ய, இந்தோனேசியக் குடியரசு மற்றும் புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) துணைத்தலைமை ஏற்றுள்ள வரைவுக்குழுவை மண்டல ஆதரவு அலுவலகம் (RSO) ஏற்படுத்தியுள்ளது. இந்த வரைவுக்குழுவில் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, மாலத்தீவு, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் புலம்பெயர்வுக்கான பன்னாட்டுக் கழகம் (IOM) சார்ந்த வல்லுநர்கள் அடங்கியுள்ளார்கள்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி கொள்கை பகுப்பாளர்கள் மற்றும் செயல்படுத்துபவர்களுக்கு உதவும் வகையில் சிறிய அறிமுகக் கையேடுகளைத் தயாரிக்கும் நோக்கத்துடன் அந்தக் குழு ஆறுமாத காலத்தில் நான்கு முறை கூடியுள்ளது. கையேடுகளின் வரைவுப் பதிப்புகள் பாலி செயல்முறை உறுப்பினர்களுக்கும் மற்றும் பார்வையாளர்களுக்கும் கருத்துக்களை எழுத்துவடிவில் வழங்குவதற்காகச் சுற்றுக்கு விடப்பட்டு, அதன்பின் தாய்லாந்தில் உள்ள பாங்காங்கில் மார்ச் 23 முதல் 24 வரை நடைபெற்ற பாலி செயல்முறையின் முழு கலந்தாய்வுப் பட்டறையில் விவாதிக்கப்பட்டு, மறுஆய்வு செய்யப்பட்டது. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவும், பாதுகாக்கவும் கொள்கை வகுப்பாளர்களுக்கும், செயல்படுத்துபவர்ளுக்கும் உதவும் வகையில் கொள்கைக் கையேடுகள் பயனுள்ள ஆதாரமாய் இருந்தன என்று அதில் பங்குபெற்றோர் ஒப்புக்கொண்டனர். உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களுக்கு இணங்க, வரைவுக்குழு வரைவுகளைத் திருத்தி, முக்கிய மாற்றங்களையும் மற்றும் பரிந்துரைகளையும் இணைத்தது.

பாலி செயல்முறை உறுப்பு நாடுகளில் இருந்து நல்ல நடைமுறைகளை உதாரணங்களைப் பெருமளவில் எடுத்துக்கொண்டு ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் சர்வதேச மற்றும் பிராந்திய தரத்துக்கான கண்ணோட்டத்தை வழங்குவதை கொள்கைக் கையேடுகள் இலக்காகக் கொண்டுள்ளன. 2013 ஏப்ரலில் நடைபெற்ற ஐந்தாவது உயர்மட்டக் கூட்டத்தின் பரிந்துரைக்கு இணங்க, இத்தகைய கொள்கைக் கையேடுகள், பாலி செயல்முறையின் கருப்பொருள் பகுதிகளையும் மற்றும் பாலி செயல்முறை உறுப்பினர்களின் குறிப்பிட்ட அக்கறை காட்டும் பிரச்சினைகளையும் கொண்டுள்ள பாலி செயல்முறை கொள்கை கையேடுகளின் இரண்டாம் தொகுதியாகும். அவை தன்னிச்சையானவை மற்றும் பிணைப்பு எதுவும் இல்லாதவை. அத்துடன் பாலி செயல்முறை உறுப்பினர் நாடுகளிலுள்ள பல்வேறு உள்நாட்டு நிறுவனங்களால் குறிப்பு சாதனங்களாகப் பயன்படுத்தும் நோக்கம் கொண்டவை.

லிசா க்ராஃபோர்டு
(Lisa Crawford)
மண்டல ஆதரவு அலுவலக (RSO)
இணை மேலாளர் (ஆஸ்திரேலியா)

பெபெப் ஏ. கே. என். ஜின்ஜினன்
(Bebeb A.K.N. Djundjunan)
மண்டல ஆதரவு அலுவலக (RSO)
இணை மேலாளர் (இந்தோனேசியா)

REGIONAL SUPPORT OFFICE
THE BALI PROCESS

தலைப்பெழுத்துச் சொற்கள் மற்றும் சுருக்கப்பெயர்கள்

ASEAN	தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு
Bali Process	ஆள்கடத்தல் வியாபாரம், மக்களைக் கடத்துதல் மற்றும் அது தொடர்பான நாடு கடந்த குற்றம் பற்றிய பாலி செயல்முறை
ILO	பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு
IOM	புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு
MOU	புரிந்துணர்வு ஒப்பந்தம்
NGO	அரசு சாரா அமைப்பு
Organized Crime Convention	ஒழுங்கமைக்கப்பட்ட நாடுகடந்த குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம்
RSO	பாலி செயல்முறையின் மண்டல ஆதரவு அலுவலகம்
Trafficking in Persons Protocol	ஒழுங்கமைக்கப்பட்ட நாடுகடந்த குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்துக்கு இணைப்பாக மக்களை, அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறை
UN	ஐக்கிய நாடுகள்
UNHCR	அகதியருக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர்
UNODC	போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம்

பொருளடக்கம்

செயலாக்கச் சுருக்கம் 2

பிரிவு 1: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய அறிமுகம் 3

1.1. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க பன்னாட்டுச் சட்டக் கட்டமைப்பு 3

1.2. பாதுகாப்புச் சவால்கள் 5

1.3.பாதுகாப்புப் பரிசீலனைகள்: முக்கிய கடமைகள் மற்றும் நலன்கள் 6

பிரிவு 2: பாதுகாப்பைச் செயல்படுத்துதல் 9

2.1. ஆரம்பப் பாதுகாப்பு 9

2.2. குற்றவியல் நீதிச் செயல்முறை மூலம் பாதுகாப்பு 11

2.3. நீடித்து நிலைத்திருக்கக்கூடிய பாதுகாப்புத் தீர்வுகள் 19

பிரிவு 3: ஒருங்கிணைப்பு மற்றும் பல-பங்குதாரர் அணுகுமுறை 19

3.1. பாதுகாப்புப் பங்குதாரர்கள் 19

3.2. அரசியல் மட்டத்தில் ஒருங்கிணைப்பு 21

3.3. செயல்பாட்டு மட்டத்தில் ஒருங்கிணைப்பு 22

பிரிவு4: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய உதவிக்குறிப்புகளின் தொகுப்பு 24

செயலாக்கச் சுருக்கம்

மனிதர்களைக் கடத்துதல் என்பது மனித உரிமைகளின் அழிவுக்கேதுவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு கடுமையான குற்றமாகும். மக்களை, அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலைத் தடுக்கும், ஒடுக்கும் மற்றும் தண்டிக்கும் நெறிமுறை (மக்களைக் கடத்துதல் நெறிமுறை) மற்றும் பன்னாட்டு மனித உரிமைகள் மரபுகள் மற்றும் பிராந்திய கடமைகள் உள்ளிட்ட பிற பன்னாட்டுச் சாதனங்களின் கீழ் மாநிலங்கள் தங்கள் சர்வதேசக் கடமைகளின் ஒரு பகுதியாகப் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. குற்றத்துக்குத் திறமையான குற்றவியல் நீதிமுறையின் பதில் என்பதே பாதிக்கப்பட்டோருக்குப் பாதுகாப்பின் முக்கிய அடித்தளமாகும்; ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் சரியான வகையில் பாதுகாக்கப்படாதவரை, ஆள்கடத்தல்காரர்களுக்கு எதிரான குற்றவியல் நீதி நடவடிக்கைக்கு ஆதரவளிக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்காது.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கடமைகளைக் கடைப்பிடிக்கும்போது, ஆள்கடத்தலால் பாதிக்கபட்டோர்களின் தனிப்பட்ட தேவைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுகின்ற வகையில் பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தும் அணுகுமுறையை மாநிலங்கள் கையாள வேண்டும் என்று இந்த கொள்கைக் கையேடு பரிந்துரைத்து, அதற்கேற்றவாறு பாதுகாப்பு முறைகளை வடிவமைக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பில் நிபந்தனை இருக்கக்கூடாது அதுபோல் குற்றவியல் நீதி அமைப்பில் பங்குபெறுவதற்கு எவ்வித சமரசமும் இருக்கக்கூடாது. பாதுகாப்புச் சவால்களைப் புரிந்து கொள்ளும்போது, மாநில அரசு அதிகாரிகள் அவர்களது வேலைகளில் ஆதரவளிக்கப்படுகிறார்கள். அத்துடன் பொருத்தமான சட்டக் கட்டமைப்பு மற்றும் சர்வதேச சிறந்த பயிற்சிக்கு ஏற்ப அவற்றைத் திறம்படக் கையாளப் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

பாதுகாப்புக் கடமைகளை நடைமுறைப்படுத்தும் வகையில், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை முதலாவது தொடர்பு கொண்ட நிலையிலிருந்து, அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு சமூக – பொருளாதார தன்னிறைவு பெறும் காலம் வரை மேலும் தீங்கு ஏற்படாவண்ணம் மாநிலங்கள் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் ஆரம்பப் பாதுகாப்பு, அவர்களது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் தங்கள் அனுபவங்களிலிருந்து உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் மீண்டுவந்து, குற்றவியல் நீதிச் செயல்பாடுகளில் பங்கேற்பதா இல்லையா என்பது உட்பட, எதிர்காலத்தைப் பற்றி முடிவெடுக்க அனுமதிக்கும்வகையில் தேவையான சிந்தனைக் காலமும் அதில் உள்ளடங்கியதாய் இருக்க வேண்டும். செய்ய விருப்பப்பட்டு அதைச் செய்து முடிப்பவர்களுக்காக, பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்கள் மற்றும் அக்கறைகள் அந்த செயல்பாட்டின் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னிலைப்படுத்தப்படுவதும், கருத்தில் கொள்ளப்படுவதும் மற்றும் வழங்கப்படுவதும் ஒரு நல்ல நடைமுறையாகக் கருதப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வரும் அச்சுறுத்தல்கள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருப்பதால் பாதுகாப்புத் திட்டங்கள் அபாயக் கணிப்பீடுகளின் அடிப்படையில் திருத்தப்படவேண்டும்.

பயனுள்ள மற்றும் நீடித்த பாதுகாப்புத் திட்டங்கள் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் சொந்தமாக இயங்கக்கூடிய தன்மையை மீண்டும் பெறுவதற்கும், அத்துடன் தங்கள் சமுதாயத்தின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையில் தன்னிறைவு பெற்ற பங்கேற்பாளர்களாக ஆவதன் மூலம் சமூகத்துடன் ஒன்றிணைவதற்கும் உதவும். வெற்றிகரமான மீட்பு மற்றும் மறு ஒருங்கிணைப்பில் ஒரு முக்கிய காரணியாக குற்றவியல் (கிரிமினல்) அல்லது குடிமை (சிவில்) நடைமுறைகள் மூலம் இழப்பீட்டைப் பெற இந்தக் கையேடு கோடிட்டுக் காட்டுகிறது. நாடு கடந்த ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் சிந்தனை செய்வதற்கான காலக்கட்டத்துக்குப் பிறகு மற்றும் அவர்கள் தங்கள் அனுபவங்களிலிருந்து மீண்ட பிறகு அல்லது ஆள்கடத்தல்காரர்கள் மீது குற்றவியல் நடவடிக்கைகள் ஒரு முடிவுக்கு வந்தபிறகு, தங்கள் பிறந்த நாட்டுக்கு திரும்பலாம் அல்லது அவர்களை அடையாளப்படுத்தும் நாட்டில் இருக்கலாம் அல்லது வேறு எங்காவது குடியேறலாம். பாதிக்கப்பட்டவர்களுக்கு எது சிறந்த தெரிவு என்பதைத் தீர்மானிப்பதில், பதிலடி கொடுத்தல், மிரட்டுதல் போன்ற அச்சுறுத்தல்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் கடமை மாநிலங்களுக்கு உள்ளது என்றாலும், அந்த கடமைகளை நிறைவேற்ற அவர்களைப் பாதுகாப்பதில் மற்றவர்களும் முக்கிய பங்கு வகிக்கக்கூடும். மாநிலம் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு என்பது மிகவும் அவசியம் ஆகிறது. அரசு சாரா அமைப்புகளானது நம்பிக்கையை ஏற்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுடன் ஒத்துணர்வை உருவாக்கவும், அவர்களது பாதுகாப்புத் தேவைகளை புரிந்து கொள்ளவும், அத்துடன் அவற்றைத் தீர்த்துவைக்கக்கூடிய சிறந்த, விரிவான சேவைகளை வழங்கவும் சிறப்புத் திறன்களைக் கொண்டிருக்கக்கூடும். மாநிலங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக்குப் பயனுள்ள பாதுகாப்பும் தேவைப்படலாம். பாலி செயல்முறை உட்பட ஆசிய – பசிபிக் பிராந்தியத்தில் உள்ள வலுவான இருதரப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு வழிமுறைகள், பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்பை வலுப்படுத்தக்கூடிய ஒரு திடமான அடிப்படையாக உள்ளது. இந்தக் கொள்கைக் கையேடு பாதுகாப்பு வழிமுறைகளை மேம்படுத்தவும், அவற்றை பிராந்தியம் முழுவதும் தரப்படுத்துவதுமான முக்கியமான வேலைகளில் மாநிலங்களுக்கு ஆதரவைத் தரக்கூடிய ஒரு சாதனமாக வழங்கப்படுகிறது.

பிரிவு 1:

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது பற்றிய அறிமுகம்

1.1. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க பன்னாட்டுச் சட்டக் கட்டமைப்பு

ஒழுங்கமைக்கப்பட்ட நாடுகடந்த குற்றத்துக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் (ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கான ஒப்பந்தம்) சட்டப்பிரிவு 25, பதிலடி கொடுத்தல், மிரட்டுதல் போன்ற அச்சுறுத்தல்கள் உள்ள சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கவும், பாதுகாக்கவும் அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் உரிமையை மீட்டளிப்பதற்கும், அவர்களுக்கான இழப்பீட்டைப் பெறுவதற்குமான சரியான செயல்முறைகளை உருவாக்கித் தர மாநில அமைப்புகள் கடமைப்பட்டுள்ளன எனக்கூறுகிறது. பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பது என்பது மக்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறையின் (மக்களைக் கடத்துதல் நெறிமுறை) நோக்கங்களில் ஒன்றாகும். அந்நெறிமுறை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கான ஒப்பந்தத்தின் இணைப்பாகும். மக்களைக் கடத்துதலில் நெறிமுறை சட்டப்பிரிவு 6 மாநிலங்களுக்குப் பின்வருவனவற்றை விளக்கியிருக்கிறது:

- பொருத்தமான சூழ்நிலைகளில், முடிந்தவரை, சட்ட நடவடிக்கைகளில் ரகசியம் காப்பது உட்பட பாதிக்கப்பட்டவர்களின் அந்தரங்கம் மற்றும் அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும் (சட்டப்பிரிவு 6(1));
- பொருத்தமான சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வழங்க வேண்டும். அத்துடன் குற்றவியல் நடவடிக்கைகளில் எதிர்தரப்புக்குப் பாதகமின்றி, நீதிமன்றத்தில் தங்கள் கருத்துக்களையும், கவலைகளையும் தெரிவிக்க உதவிபுரிய வேண்டும் (சட்டப்பிரிவு 6(2));
- பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான வீட்டுவசதி, ஆலோசனை மற்றும் தகவல்கள்; மருத்துவ, உளவியல் மற்றும் பொருளுதவி அத்துடன் வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகள் வழங்குவது உட்பட அவர்களுக்கு உடல், உளவியல் மற்றும் சமூக மீட்பையும் வழங்கிட வேண்டும் (சட்டப்பிரிவு 6(3));
- பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் பாதுகாப்பு வழங்க முயற்சி செய்யவேண்டும் (சட்டப்பிரிவு 6(5));
- பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் அனுபவித்த இன்னலுக்கு இழப்பீடு பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைச் சட்ட அமைப்பு வழங்குகிறதா என்பது உறுதி செய்யப்பட வேண்டும் (சட்டப்பிரிவு 6(6)).

மக்களைக் கடத்துதல் நெறிமுறையானது, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் வயது, பாலினம் மற்றும் தனிப்பட்ட தேவைகளை அதிலும் குறிப்பாக தேவையான வீட்டுவசதிகள், கல்வி மற்றும் பராமரிப்பு போன்ற குழந்தைகளுக்கான சிறப்புத் தேவைகளையும், மாநிலங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது (சட்டப்பிரிவு 6(4)).

உதவிக்குறிப்பு: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான முக்கிய கொள்கைகளைப் பின்பற்றுதல்

- **ஒரு மாநிலத்தில் முறையற்ற வகையில் நுழைந்தமைக்கோ அல்லது தங்கியிருந்தமைக்கோ அல்லது மற்ற சட்டவிரோதச் செயல்களுக்கோஅல்லது ஆள்கடத்தலின் நேரடி விளைவாக அவர்கள இழைத்துள்ள குற்றங்களுக்காகவோ, பாதிக்கப்பட்டவர்களைக் கைது செய்யவோ, குற்றம் சாட்டவோ அல்லது தண்டனைக்கு உட்படுத்தவோ கூடாது**
- **பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய உடல் மற்றும் உளவியல் பராமரிப்பைக் கட்டாயம் தரவேண்டும்**
- **பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும் குற்றவியல், சிவில் அல்லது பிற நடவடிக்கைகள் மூலம் சட்ட மற்றும் பிற உதவிகள் கட்டாயம் வழக்கப்பட வேண்டும்.**
- **ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவர்களுக்கான சிறப்பு பலவீனங்கள், உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப உரிய உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்**
- **பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான (மற்றும் சாத்தியப்பட்டால், சுயவிருப்பத்தோடு) திரும்புவதற்கான உத்தரவாதம் திரும்பவரும் மற்றும் பிறந்த மாநிலங்களால் தரப்பட வேண்டும்**
- **பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயனுள்ள மற்றும் உரிய சட்டத்தீர்வுகளைத் தரவேண்டும்**

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகம் (OHCHR) பரிந்துரைத்த மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதலுக்கான வழிகாட்டுதல்களைப் பார்க்கவும்

மக்களைக் கடத்துதல் நெறிமுறைகளில் உள்ள வழிவகைகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர் களுக்கான நெறிசார்ந்த கட்டமைப்பு மற்றும் பாதுகாப்புக்காக விரிவான வகையில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். சட்டப்பிரிவு 14(1)-இன்படி, நெறிமுறையானது சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் மனிதாபிமான சட்டம் உட்பட சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்ப புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

உதவிக்குறிப்பு: சர்வதேசச் சட்டத்தில் பாதுகாப்பு வழிவகைகளை நடைமுறைப்படுத்துதல்:

மக்களைக் கடத்துதல் நெறிமுறையில் குறைந்தபட்ச தரத்துக்கும் தாண்டிச் செல்லும் பிற மாநிலங்களை முன்மாதிரியாகப் பின்பற்ற மாநிலங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, குற்றவியல் நடவடிக்கைகளுக்குக் கூடுதலாகவும், வெளியேயும் இழப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப் படுத்துவது.

ஓர் அகதியை அல்லது புகலிடம் வேண்டுவோரை வெளியேற்றவோ அல்லது அவரது இனம், மதம், நாடு, குறிப்பிட்ட ஒரு சமுதாயக் குழு அல்லது அரசியல் கருத்து காரணமாக அவரது உயிருக்கு அல்லது சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் உள்ள ஒரு இடத்துக்குத் திருப்பியனுப்பவோ முடியாது என்பதை வலியுறுத்த அகதியரின் நிலை தொடர்பான 1951 ஒப்பந்தம் மற்றும் அகதியரின் நிலை தொடர்பான 1967 நெறிமுறை மற்றும் புகலிடம் வேண்டிவருவோரை வலுக்கட்டாயமாக திருப்பியனுப்பாத கொள்கை போன்றவை குறிப்பிட்டுக் கூறுகின்றன.[1] கூடுதலாக, மக்களைக் கடத்துதல் நெறிமுறையின் சட்டப்பிரிவு 14(2), அதைச் செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாகுபாடின்மை என்ற சர்வதேசக் கொள்கைகளை ஒட்டியே இருக்க வேண்டுமென விளக்குகிறது. அதன் பொருள் என்னவென்றால், ஒரு நபரிடம் அவரது புலம்பெயர்தல் அல்லது மற்ற அந்தஸ்து உட்பட எந்த பண்பின் அடிப்படையிலும் பாகுபாடு காண்பிக்கக் கூடவே கூடாது.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தலில் புகலிடம் வேண்டிவருவோரை வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பாத கொள்கை

ஒரு நபரின் உயிர் அல்லது சுதந்திரம் அச்சுறுத்தப்படும் அபாயம் உள்ள அல்லது அந்த நபர் துன்புறுத்தப்படக்கூடிய இடத்துக்கு அவரை திருப்பி அனுப்பாமலிருக்கும் மாநிலங்களின் கடமை அனைத்து நபர்களுக்கும் பொருந்தும். அத்துடன் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதின் தாக்கங்களும் உண்டு.[2] குறிப்பாக குழந்தைகளைப் பொறுத்தவரையில், "பிறந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பும்போது அது ஒரு 'நியாயமான அபாயத்துக்கு' இட்டுச்செல்லும் மேலும் அது குழந்தையின் அடிப்படை உரிமைகளை மீறுவது அதிலும் குறிப்பாக புதலிடம் வேண்டிவருவோரை வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பாத கொள்கை பொருந்தும் எனும்போது பிறந்த நாட்டுக்குத் திருப்பியனுப்புதல் ஒரு தீர்வாகாது" என்று குழந்தை உரிமைகள் மீதான குழு தெரிவித்துள்ளது. பிறந்த நாட்டுக்குத் திரும்புதல் என்பது கொள்கை அடிப்படையில் அப்படித் திரும்புவது குழந்தையின் நன்மைக்காக இருக்கும் என்னும் பட்சத்தில் ஏற்பாடு செய்யப்படலாம்."[3]

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பொறுத்தவரையில், குழந்தையின் உரிமைகள் குறித்த ஒப்பந்தத்தின் (CRC) சட்டப்பிரிவு 39, உடல்ரீதியான மற்றும் மனரீதியான மீட்பு மற்றும் பாதிக்கப்பட்ட

[1] 1951 அகதியர் நிலைமை தொடர்பான அகதி உடன்படிக்கை சட்டவிதி 33(1), சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை சட்டவிதி 3 மற்றும் பலவந்தமாய்க் காணாமல்போன அனைத்து நபர்கள் பாதுகாப்பு சர்வதேச ஒப்பந்தம் சட்டவிதி 16 இவைகளைப் பார்க்கவும். அத்துடன் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை சட்டப்பிரிவு 7 இவைகளைப் பார்க்கவும். இதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு புகலிடம் வேண்டிவருவோரை வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பும் தடையைக் கட்டுப்படுத்தும் என விளக்கமளித்துள்ளது. பார்க்க: ஐ.நா மனித உரிமைகள் குழு (HRC), CCPR பொதுக் கருத்து எண் 20: சட்டவிதி 7 (சித்திரவதைக்கான தடை, அல்லது பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துமுறைகள் அல்லது தண்டனைகள்), 10 மார்ச் 1992, பத்தி 9.

[2] 1951 அகதியர் நிலைமை தொடர்பான அகதி உடன்படிக்கை சட்டவிதி 33(1). அத்துடன் மக்களைக் கடத்துதல் நெறிமுறை, சட்டவிதி 14, மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை, 16 டிசம்பர் 1966, சட்டவிதி 6 மற்றும் 7 இவைகளைப் பார்க்கவும். புகலிடம் வேண்டிவருவோரைத் வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பாத கொள்கை கூட சம்பிரதாயமான சர்வதேசச் சட்டத்தின் நியதியாகிவிட்டது.

[3] குழந்தை உரிமைகள் குழு, பொதுக்கருத்து எண் 6 (2005), தாங்கள் பிறந்த நாட்டுக்கு வெளியே துணையில்லாத மற்றும் பிரிக்கப்பட்ட குழந்தைகளை நடத்தும் முறை, பத்தி 84. குழந்தையின் மிகச்சிறந்த நலன்களைத் தீர்மானிக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் குழந்தைகளின் நலன்களுடன் மாநிலங்களின் நலன்கள் உட்பட மற்ற நலன்களையும் சமனப்படுத்தும் வேலையைச் செய்ய முடியுமா என்பதை மாநிலங்கள் உறுதி செய்யவேண்டும். மேலும் பார்க்க: குழந்தையின் மிகச்சிறந்த நலன்களைத் தீர்மானிப்பதற்கான UN-HCR வழிகாட்டுதல்கள், UNHCR, மே 2008. கிடைக்குமிடம்: http://www.refworld.org/ docid/48480c342.html

குழந்தையின் சமூக ஒருங்கிணைப்பை மாநிலங்கள் ஊக்குவிக்க உதவ வேண்டுகிறது. குழந்தைகள் பற்றிய அனைத்து விஷயங்களிலும் மாநிலங்கள், குழந்தையின் நன்மையை கருத்தில் கொள்ள CRC-இன் சட்டப்பிரிவு 3 வேண்டுகிறது. குழந்தைகளின் சிறந்த நலன்களுக்கான பரிசீலனைகள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவவும், அவர்களைப் பாதுகாக்கவும் செயல்முறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் முறையாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் 18 வயதுக்குக் குறைவாக இருப்பதாக, நியாயமானமுறையில், கருதப்பட்டால், தேவையான வயது மதிப்பீடுகள் மூலமாக உறுதி செய்யப்படும் வரை, பாதிக்கப்பட்ட குழந்தைக்கும்' தனது வயதை நிரூபிக்க வேண்டிய அவசியமின்றி உயர்தரமான உதவியும், பாதுகாப்பும் பெறும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

குடியுரிமை அல்லாதோர் உட்பட மாநில அதிகார வரம்புக்குட்பட்ட அனைத்து தனிநபர்களுக்கும் அடிப்படை மனித உரிமைகள் உண்டு. இது அடிமைத்தனம், கட்டுப்பெட்டித்தனம் மற்றும் வலுக்கட்டாய உழைப்பு இவைகளிலிருந்து விடுதலைக்கான உரிமையை நிர்ணயிக்கின்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை (ICCPR), இதன் ஒப்பந்தத்தின் கீழ் யாருடைய உரிமைகள் மீறப்பட்டனவோ அந்த மக்களுக்குப் பயனுள்ள தீர்வுக்கான உரிமையை உருவாக்குகிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபை, பயனுள்ள தீர்வுக்கான உரிமை என்பது குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்கும் கடமையை உள்ளடக்கியது என்று கூறுகிறது.

குடியுரிமை அல்லாத பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும் பாதுகாக்க வேண்டிய மாநிலத்தின் கடமைகளை வலியுறுத்த பல்வேறு நெறிமுறைகள் மற்றும் தரமதிப்பீடுகள் உள்ளன.[4] இந்த வகையில், இனப் பாகுபாட்டை நீக்குதல் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் சட்ட விதி 5(பி) மற்றும் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் சட்டவிதி 16(2) ஆகியவை குறிப்பாகப் பொருத்தமானவை. இந்த ஏற்பாடுகளின்படி, முறையற்ற சூழ்நிலைகளில், மாநில அதிகாரிகள் அல்லது தனியாக செயல்படுவோரால் உடல் அல்லது பாலியல் வன்முறையால் துன்பப்படுத்தப்படுவோர் உட்பட அனைத்து மக்களுக்கும் பயனுள்ள குற்றவியல் நீதி பாதுகாப்பு மாநில அமைப்புகள் வழங்க வேண்டிக் கொள்ளப்படுகிறது.

அநேக சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) உடன்படிக்கைகள் இதில் பொருந்தக்கூடியவை. நிர்ப்பந்த அல்லது கட்டாய உழைப்பால் பாதிக்கப்பட்டவர்கள பற்றிய ஒப்பந்த எண் 29 (1930) மற்றும் 2014 அதனுடனே நெறிமுறை (ஜுன் 2014) போன்றவை வலுக்கட்டாய உழைப்பு மற்றும் மக்களைக் கடத்துதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பாதுகாப்பை வலுப்படுத்துகின்ற விளைவை ஏற்படுத்தும். வலுக்கட்டாய உழைப்பு (துணை நடவடிக்கைகள்) பற்றிய பரிந்துரை எண் 203 பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு உட்பட பாதுகாப்பு நடவடிக்கைகளை நிர்ணயிக்கிறது. அத்துடன் குழந்தைத் தொழிலாளர்களின் மோசமான வடிவங்கள் பற்றிய ஒப்பந்த எண் 182 குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றி உரைக்கிறது. மேலும் வீட்டுத் தொழிலாளர்களுக்கான கண்ணியமான வேலை (2011) பற்றிய ஒப்பந்த எண் 189 உறுப்பினர் மாநிலங்கள் தொழிலாளர்கள் ஒப்பந்தங்கள் கோருவதன் மூலமும், தங்கள் பயணம் மற்றும் அடையாள ஆவணங்களை வைத்திருக்கும் உரிமைகளை உறுதிப்படுத்துவதன் மூலமும், மற்றும் தனியார் வேலைவாய்ப்பு ஏஜென்சிகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் எல்லா வீட்டுத் தொழிலாளர்களின் மனித உரிமைகளை மேம்படுத்த மற்றும் பாதுகாக்க வேண்டுகிறது.

1.2. பாதுகாப்புச் சவால்கள்

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள்[5] - புலம்பெயர்வு அல்லது வேறு எந்த அந்தஸ்தாக இருந்தாலும் – மேலும் தீங்கிழைக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களது மனித உரிமைகளைக் கடைப்பிடிக்கும்பொருட்டு பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் கடமை மாநிலங்களுக்கு

---

[4] எடுத்துக்காட்டாக, பின்வருவனவற்றைப் பார்க்கவும்: குற்றம் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியின் அடிப்படைத் கொள்கைகளுக்கான ஐ.நா. பிரகடனத்தில் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சியைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள், A/RES/40/34, (29 நவம்பர் 1985). (சட்டவிதி 6(டி)). பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் சாட்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் நீதிக்கு வழிகாட்டுதல்கள் (எண் 32-34). UNTOC சட்டவிதிகள் 24 முதல் 26. மக்களைக் கடத்துதல் நெறிமுறையில் விதிமுறைகள் 6 முதல் 8. நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் (புலம்பெயர்ந்தோர் கடத்தல் நெறிமுறை) கூடுதலாக நிலம், கடல் மற்றும் வான் வழியாக புலம்பெயர்ந்தோரைக் கடத்தலுக்கு எதிரான நெறிமுறை சட்டவிதி 16(2). அத்துடன் ஐ.நா. பொது சபை சட்டவிதி 32, ஐக்கிய நாடுகள் ஊழலுக்கு எதிரான ஒப்பந்தம், 31 அக்டோபர் 2003. A/58/422.

[5] இந்த ஆவணம் முழுவதிலும், மக்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலை தடுக்க, ஒடுக்க மற்றும் தண்டிக்க ஏற்படுத்தப்பட்ட நெறிமுறை (மக்களைக் கடத்துதல் நெறிமுறை) சட்டவிதி 3-இல் குறிப்பிட்டுள்ளபடி 'ஆள்கடத்தல்' என்ற வார்த்தை 'மக்களைக் கடத்துதலைக்' குறிப்பிடுவதாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கான கொள்கைக் கையேடு பாலி செயல்முறை, 2015-ஐப் பார்க்கவும்.

[6] மேலதிக விவரங்களுக்கு, ஆள்கடத்தலை சட்டவிரோதமாக்குவதற்கான கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2014-ஐப் பார்க்கவும்.

[7] மேலதிக விவரங்களுக்கு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015-ஐப் பார்க்கவும்..

[8] மேலதிக விவரங்களுக்கு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015 பிரிவு 2.2-ஐப் பார்க்கவும்

உண்டு. குற்றவியல் விசாரணையின்போது சாட்சிகளாக இருப்பவர்களுக்கு பாதுகாப்பு உட்பட பாதிக்கப்பட்டோருக்கான பாதுகாப்பு, மக்களைக் கடத்துதல் நெறிமுறையின்[6] சட்டவிதி 3-இல் வரையறுத்துள்ளபடி, பயனுள்ள மற்றும் முழுமையான பதில்களுக்கு ஒரு அடித்தளமும் ஆகும்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்படும்[7] சாத்தியமுள்ளவர்களை அடையாளம் காண்பதில் உள்ள ஆரம்ப சவால்களுக்கு அப்பால், கூடுதலான பல சவால்களை மாநிலங்கள் தங்கள் பாதுகாப்புக் கடமையை நிறைவேற்றும்போது எதிர்கொள்கின்றன. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் தேசிய அதிகாரிகளால்[8] அடையாளப்படுத்தப் படுவதை விரும்பாதது போன்ற காரணங்களுக்காக, மாநிலத்தால் வழங்கப்படும் பாதுகாப்பைப் பெறுவதில் தயக்கம் காட்டக்கூடும். மாநில நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களை ஆபத்திலிருந்து, குறிப்பாக குடும்ப அங்கத்தினர்கள் மற்ற மாநிலங்களில் அல்லது அதிகார வரம்புகளில் இருக்கும்போது, பாதுகாக்கும் திறமையின் மேல் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் ஏற்படாமல் போகலாம். பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தேசிய அதிகாரிகளிடம் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதைவிட ஆள்கடத்தல்காரர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதையே விரும்பக்கூடும். ஏனென்றால் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் வெவ்வேறு வயது, இனவேறுபாடு, பாலின, பொருளாதார நிலை, கல்வி மற்றும் குடும்பப் பின்னணி, அத்துடன் வெவ்வேறு அனுபவங்கள், நோக்கங்கள் மற்றும் இலக்குகள் கொண்டிருப்பதால், ‘அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரே அளவு’ என்பது பலனளிக்காது.[9] தங்களை அடையாளம் காட்டிய நாட்டில் தங்கியிருக்க உரிமையற்ற குடியுரிமை அல்லாதோர் இழப்பீடுகளைப் பெறுவது அல்லது கோரிக்கைகளைத் தொடர்வது உட்பட பாதுகாப்புச் சேவைகளை அடைவதில் தடைகளை எதிர்கொள்ளக்கூடும். ஆனால் அனைத்து நபர்களுக்கும், அவர்களுடைய புலம்பெயர்வு அந்தஸ்து எவ்வாறு இருப்பினும், அத்தகைய சேவைகளை [10] அணுகும் உரிமையளிக்கப்பட வேண்டும்.

1.3. பாதுகாப்புப் பரிசீலனைகள்: முக்கிய கடமைகள் மற்றும் நலன்கள்

ஆள்கடத்தலுக்கான முழுமையான பதிலின் ஒரு முக்கியக்கூறாக பாதுகாப்பு இருக்கிறது.[11] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் உறுதியுடன் பாதுகாக்கப்படாத வரை, அவர்கள் தொடர்ந்து சுரண்டப்படக்கூடும், அவர்களது சுரண்டலிருந்து எப்போதும் மீளமுடியாது அல்லது மறுபடியும் ஆள்கடத்தலில் சிக்கிவிடுவர். அவர்கள் குற்றவியல் நீதி செயல்முறைகளில் பங்களிக்க ஒப்புக்கொள்கிறார்களோ இல்லையோ மாநிலங்களுக்குப் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் விசாரணைகளில் அல்லது வழக்குகளில் எங்கே பங்கேற்க விரும்புகிறார்களோ, அங்கே அவர்களது வாக்குமூலங்கள் ஆள்கடத்தல்காரர்களைக் கண்டுபிடிப்பதில், விசாரணை செய்வதில் மற்றும் வழக்குப் போடுவதில் மாநிலங்களின் ஆர்வத்தைப் பெருக்கிட மிக முக்கியமான காரணியாக இருக்கலாம். மற்றும் இதையொட்டி அவை குற்றத்தைத் தடுக்கவும், ஒடுக்கவும் ஊக்குவிக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் உறுதியாகப் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வது ஆள்கடத்தல்காரர்களை நீதியின் முன்நிறுத்தும் சட்ட அமலாக்க முயற்சிகளுக்குப் பங்களிக்க முடிகின்ற சாத்தியக்கூறுகளை அதிகரிக்கிறது.

பயனுள்ளதாக இருக்க, மாநிலத்தின் எதிர்வினைகள் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் நலன்களைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டோரை மையப்படுத்துவதாகவும், முழுமையானதாகவும் இருக்க வேண்டும். பாதுகாப்பு மற்றும் உதவித் திட்டங்களுக்கான முக்கிய பரிசீலனைகளில் பின்வருவன அடங்கும்:

- பாதிக்கப்பட்டவர்களில் சிலர் வீட்டுக்குத் திரும்பி, தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் இணைய விரும்புவார்கள். மற்றவர்கள் தங்களுடைய சமுதாயத்துக்கு உடனடியாகத் திரும்ப முடியாது. அத்துடன் அவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டியதிருக்கும், மருத்துவ மற்றும் உளவியல் சிகிச்சை பெற வேண்டியதிருக்கும் மற்றும்/அல்லது சட்டபூர்வ நிவாரணம் தேவைப்படும். இதில் கடத்தல் வழக்குகளில் விசாரணை மற்றும் வழக்குகளில் பங்குபெறுவதும் அடங்கும்
- பாதிக்கப்பட்டோர்களில் சிலர் திரும்பவே முடியாது, ஏனென்றால் அவர்கள் பிறந்த நரட்டைச் சேர்ந்த ஆள் எடுப்பவர்கள் அல்லது மற்றவர்கள் தொடர்ந்து அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம். இத்தகைய வழக்குகளில் அவர்கள் அடையாளப்பட்ட மாநிலங்களில் அல்லது மாற்று மாநிலங்களில், நீடித்த பாதுகாப்புத் தீர்வுகளை அவர்களுக்கு வழங்குவது சிறந்த நடைமுறையாகும்
- மாநிலங்களின் பாதுகாப்புச் சேவைகள் தனிநபர்களின் சில பிரிவுகளை, எடுத்துக்காட்டாக உள்நாட்டுக் கடத்தலின் நபர்கள் அல்லது பாதிக்கப்பட்டோர்களை ஒதுக்கிவிடவோ அல்லது

[9] lசில நாடுகளில், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது தனிப்பட்ட குணநலன்களைப் பொறுத்து போதிய சேவைகள் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, பாதுகாப்பாகத் தங்குவதற்கு தங்குமிட வசதிகள் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மட்டும் கிடைக்கலாம்.

[10] மேலதிக விவரங்களுக்கு, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015, பிரிவு 2.2-ஐப் பார்க்கவும்.

[11] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015, பிரிவு 2.1 “ஏன் அடையாளம் காண்பது அவசியமாகிறது” பார்க்கவும்.

கவனிக்காமல் விட்டுவிடவோ கூடாது.

- பாதுகாப்பு தனிநபர்களின் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டோர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சவால்களைச் சமாளிக்கும் குறிப்பிட்ட திறமை மற்றும் அனுபவம் உள்ள சேவை வழங்குபவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆள்கடத்தல்காரர்களிடமிருந்து வரும் எதிர்த்தாக்குதலால் பாதிக்கப்படும் அபாயம் சில தனிநபர்களுக்கு ஏற்படலாம். ஆயினும் மற்றவர்கள் சரிசெய்யப்பட வேண்டிய பாதுகாப்புக்குத் தடைகளைச் சந்திக்க நேரிடலாம். பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு மற்றவர்களைவிட மீண்டுவர அதிக நேரம் தேவைப்படலாம் அல்லது குறிப்பிட்ட சேவைகளை உதவும் பொருட்டு அணுக வேண்டியதிருக்கலாம்.
- பாதிக்கப்பட்டவர்கள் சிறப்புப் பாதுகாப்பு பெறுவதை உறுதிசெய்யப் பெரும்பாலும் அரசு சாரா சிறப்பு அமைப்புகளுடனான ஒத்துழைப்பு தேவைப்படும். அவை பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் தங்கள் கடமையை நிறைவேற்ற, மாநிலங்களுக்கு உதவ முடியும்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு சுயஉரிமை வேண்டும். அத்துடன் தங்களுடைய உதவி மற்றும் பாதுகாப்பு தொடர்பான முடிவுகளை எடுப்பதில் அவர்களும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். வயது, இனவேறுபாடு, பாலினம், பாலியல் அமைப்பு, நாடு, இன அல்லது சமூகத் தோற்றம், உடல் ஊனம் மற்றும் பிற குணநலன்கள் மூலமாக எழுவது உள்ளிட்ட குறிப்பிட்ட தேவைகளுக்குச் சலுகை கொடுக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புத் தேவைகளானது, அவர்கள் குற்றவியல் நீதி செயல்முறைகளில் ஏதாவது ஈடுபாடு கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டு, அதற்கான நடைமுறைகள் முடிவுக்கு வந்த நாள் முதல் மாறக்கூடும். அதன்படி, தேவைகள் மாறும்போது அதற்கேற்ப பாதுகாப்பு சேவைகள் மாற்றியமைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், மாநிலங்கள் அபாய மதிப்பீடுகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

மனிதர்களைக் கடத்துதல் என்பது பெரும்பாலும் எல்லை தாண்டிய குற்றம் என்பதால், பின்வருவனவற்றை உறுதி செய்துகொள்வது அவசியமாகும்: அ) பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் நாடுள்ள மற்றும் நாடற்ற பாதிக்கப்பட்டோர் இருவருக்கும் பொருந்தும். அத்துடன் ஆ) எல்லை மற்றும் நீதி பரிபாலனை பிரச்சினைகள், மாநிலங்கள் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் தங்கள் கடமையை நிறைவேற்றும் திறனுக்கு இடையூறு ஏற்படாமல் உறுதிப்படுத்திக் கொள்ள, சர்வதேச ஒத்துழைப்பானது இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு நிலைகளில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்துக்கான ஒப்பந்தம் மற்றும் மக்களைக் கடத்துதல் நெறிமுறை ஏற்பாடுகளுக்கு ஏற்ப உருவாக்கப்படுகிறது. பெற்றுக்கொள்ளும் நாட்டைச் சேர்ந்த தூதரக முகவர்களும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதிலும், அவர்களை முதலில் தொடர்பு கொண்டவுடன் உடனடி உதவியும், பாதுகாப்பும் வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கலாம். அத்துடன் அவ்வாறு செய்வதற்குத் தேவையானவற்றை அடையப்பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.[12]

பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தும் அணுகுமுறையைப் பயன்படுத்துதல் என்பது பாதிக்கப்பட்டோர் குற்றவியல் நீதி செயல்முறையில் பங்கேற்கிறாரா இல்லையா என்பதில்லாமல் பாதுகாப்பு, இரகசியக்காப்பு மற்றும் பாரபட்சமின்மை என்ற மூலாதாரமான கருத்துக்களை அடிப்படையாக் கொண்டிருக்க வேண்டும்.

பாதுகாப்பு: பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் அவர்களுடைய குடும்பங்களுக்கும் மோசமான அபாயத்துக்கு உள்ளாக்குபவர்களாக ஆள்கடத்தல்காரர்கள் இருப்பார்கள்.

- பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் அத்துடன் மற்றவர்களுக்கும் தனிப்பட்ட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இரகசியக்காப்பு: இரகசியக்காப்பை மீறுதலானது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கக்கூடும். பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் பொதுமக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் அவதூறுக்கு, அதிலும் குறிப்பாக பாலியல் சுரண்டல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சுகிறார்கள். இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண:

- பாதிக்கப்பட்டவர்கள் ஒப்புதல் கொடுத்தால்தான் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் தகவல்கள் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் பொருட்டு, முடிந்தவரை குறைவான நபர்களிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ளப்படவேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய தகவல்களை கூடுதல் உதவிக்காகச் சிறப்பு ஏஜென்சிகளிடம்

[12] பார்க்கவும்: மனிதர்களைக் கடத்துவதால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான வழிகாட்டுதல்கள்: குறிப்பாக தூதரகச் சேவைகளுக்காக மற்றும் எல்லைப் பாதுகாவலர்களுக்காக, ஐரோப்பிய ஒன்றியம், 2013.

பகிர்ந்து கொள்ள ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட ஏஜென்சிகளுக்கு அல்லது ஊடகங்கள் போன்ற, இது தொடர்புடைய மற்றவர்களுக்குத் தகவல்களின் இரகசியக் காப்புத் தன்மையைப் பற்றி உரியமுறையில் தெரிவிக்க வேண்டும்.

பாரபட்சமின்மை: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புக் கவசங்கள், அனைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாரபட்சமின்றி நீட்டிக்கப்பட வேண்டும்.

- ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட குணநலன்களைப் பொருட்படுத்தாமல், அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.[13]
- மாநிலங்கள் பாரபட்சத்தைத் தவிர்ப்பது மட்டுமல்லாது, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதில் சம்பந்தப்பட்டுள்ள தனியார் மற்றும் மாநில அமைப்புகள் போன்றவைகளாலும், எல்லா வகையான பாரபட்சத்தை எதிர்த்துப் போராடுவதற்குச் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

உதவிக்குறிப்பு: பாதுகாப்புக்கான அணுகுமுறைகள் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியிருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளல்

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான அணுகுமுறைகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் பாதுகாப்பையும், அவர்கள் தொடர்பான தகவல்களின் இரகசியக்காப்புத் தன்மையையும் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டுள்ளனவா என்பதை உறுதிசெய்து கொள்ளவும். பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் பாரபட்சமற்ற அடிப்படையில் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் அரசு சாரா சிறப்பு நிறுவனங்களுடன் (NGO) பயனுள்ள ஒத்துழைப்பு உட்பட பாதிக்கப்படவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

[13] மேலதிக விவரங்களுக்கு பிரிவு 1.2-ஐப் பார்க்கவும்.

பிரிவு 2:

பாதுகாப்பைச் செயல்படுத்துதல்

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று முக்கிய சூழல்களில் பாதுகாப்பு தேவைப்படலாம்:

1. ஆரம்பப் பாதுகாப்பு
2. குற்றவியல் நீதி செயல்முறைகள்
3. மறு ஒருங்கிணைப்பை எளிதாக்குவது உட்பட, நீடித்தயான அடிப்படையில்.[14]

இந்த நிலைகள் முழுவதும் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய பாதுகாப்புத் தேவைகளும் மாறும். இது மாநிலங்களை நெருக்கடிக்கு ஆளாக்கி, பாதுகாப்பு சேவைகள் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமாக மாறியிருக்கிறதா என்பதை உறுதிசெய்ய, ஒவ்வொரு நிலையிலும் அபாய மதிப்பீடுகளை மேற்கொள்ள வைக்கிறது.

2.1. ஆரம்பப் பாதுகாப்பு

ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர் என்று யூகிக்கப்பட்டவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பின் தன்மை, சேவை வழங்குவோரால் செயல்படுத்தப்படும் பாதுகாப்புத் திட்டத்தின் கூடுதல் வெற்றிக்கு அவசியமானதாகும். குறிப்பாக, இந்தக் கட்டத்தில் எடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சேவை வழங்குவோருக்கும் இடையே நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு உறவுகளை நிறுவுவதற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளுக்குப் பாதுகாப்பான மற்றும் போதுமான அளவு வழங்குவது என்பது அதிகாரிகளிடம் ஒத்துழைக்கும் விருப்பத்தைச் சார்ந்து இருக்கக்கூடாது.

இந்தக் கட்டத்தில், இதன் முக்கிய நோக்கம் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் உடனடித் தேவைகள் மற்றும் ஆதங்கங்கள் ஆகும். அவைகளில் பின்வருவன அடங்கும்:

- பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்பத்தினர் அல்லது நெருங்கிய நண்பர்களின் அந்தரங்க உரிமை, பாதுகாப்பு மற்றும் பாதுகாவல்
- உணவு, உடை மற்றும் பாதுகாப்பான உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு அனுமதி
- ஆள்கடத்தலில் அவர்களது ஈடுபாட்டைச் சந்தேகிக்க எந்தக் காரணமும் இல்லாத நிலையில், அத்தகைய தொடர்பு பாதிக்கப்பட்டவருக்கும் மற்றும் அவரது குடும்பத்துக்கும் பாதுகாப்பானது என்ற நிலையில், குடும்பத்துடன் தொடர்பு மற்றும் குடும்பத்தைத் தேடுதல்
- அவசர மருத்துவச் சிகிச்சை
- சட்டம் மற்றும் புலம்பெயர்தலில் ஆலோசனை

இந்தக் கட்டத்தில்தான், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது உரிமைகள் அத்துடன் உதவியின் நோக்கம், தன்மை மற்றும் செயல்பாடு அத்துடன் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கடமைகள் மற்றும் உள்ளடக்கிய பொறுப்புகள் பற்றிய விரிவான தகவல்கள் வழங்கப்படுகின்றன. ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் வழங்கப்பட்ட தகவல்களை போதுமான அளவு பகுத்துணர்ந்து, புரிந்து கொள்ளும் நிலையில் இருக்கும்போது வழங்கப்படவேண்டும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களை அடையாளப்படுத்திய இடத்திற்கான மொழியைப் பேசவில்லையென்றால், மொழிபெயர்ப்பாளர்கள்/மொழிபெயர்த்துரைப்பாளர்கள் தேவைப்படலாம்.

உதவி கிடைக்கும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்தால் அது ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் பதற்றத்தைக் குறைக்கக்கூடும். மேலும் அடுத்த நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகளை தீர்மானிக்கவும் அவர்களுக்கு உதவும். நீடித்த, நீண்டகால ஆதரவு களம் அமைப்பதிலும், எந்த வகையான பாதுகாப்புச் சேவைகளை அவர்கள் விரும்புகிறார்கள் மற்றும் குற்றவியல் நீதி செயல்பாட்டில் பங்குபெற விரும்புகிறார்களா என்பதை முடிவுசெய்ய அதிகாரமளிக்கவும், இத்தகைய ஆரம்பக் கட்டப் பராமரிப்பு அவசியமாகிறது. குழந்தைகள் எனக் கருதப்படும் பாதிக்கப்பட்டவர்களின் வயது மதிப்பீடுகளை மேற்கொள்ளவும், சட்டபூர்வ பாதுகாவலர்கள் நியமிக்கப்படவும் மற்றும் பொருத்தமான இடைக்கால பராமரிப்பு ஏற்பாடுகளை செய்யச் சிறந்த அக்கறையுடன்

> **உதவிக்குறிப்பு:** பாதிக்கப்பட்டவர்கள் ஒத்துழைத்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களைப் பாதுகாத்தல்
>
> பாதிக்கப்பட்டவர்களின் புலம்பெயர்வு அல்லது பிற அந்தஸ்தைப் பொருட்படுத்தாது, அத்துடன் குற்றவியல் நீதி நடவடிக்கைகளில் ஒத்துழைக்க விருப்பமிருக்கிறதோ இல்லையோ, மாநிலங்கள் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதில் தங்கள் கடமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

[14] முதல் தொடர்பிலும் மற்றும் நேர்முகம் முழுவதும் (குற்றவியல் நீதி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டது உட்பட) ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பது பற்றிய தகவல்கள், ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015.

முடிவுகள் எடுக்கவும், குழந்தை உடனடியாகப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் அனுப்பப்படவேண்டும். குழந்தை யாருடனாவது சேர்ந்துவந்திருந்தால், அதன் பாதுகாவலர் குழந்தையின் சிறந்த அக்கறையின் பேரில் பிரதிநிதித்துவம் பண்ணமுடியுமா முடியாதா என்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, பாதுகாவலர் குழந்தையின் கடத்தலில் அல்லது சுரண்டலில் ஈடுபட்டிருந்ததாக சந்தேகம் இருந்தால்.15. பாதுகாவலரின் பொறுப்புகளில் குழந்தைக்கு தேவையான பராமரிப்பு, உறைவிடம், சுகாதாரப் பராமரிப்பு, உளவியல்-சமூக ஆதரவு, கல்வி மற்றும் மொழி ஆதரவு அத்துடன் குழந்தைக்கு அதன் உரிமைகளைத் தெரிவிப்பதும், குழந்தையின் சிறந்த அக்கறைக்காக தொடர்ந்த பாதுகாப்புத் தீர்வுகளை அடையாளம் காண உதவுவது அனைத்தும் அடங்கும்.[16]

ஆள்கடத்தலால் பாதிக்கப்படச் சாத்தியமுள்ளவர்களுடன் முதலில் தொடர்பு கொள்ளக்கூடியவர், பாதிக்கப்பட சாத்தியமுள்ளவர் மற்றும் பாதிக்கப்பட்டவருடன் தொடர்பு கொள்ள வரும் ஊழியர்கள் போன்றோரின் பாதுகாப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அபாய மதிப்பீட்டு செயல்முறையின் மூலம், அத்தகைய அபாயங்களை நிர்வகிக்க உரிய நடவடிக்கைகள் இருக்கவேண்டும். பாதுகாப்பு அதிகாரிகள் இருப்பது அல்லது காவல்துறையினருடன் நேரடித் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு இவைகளிலிருந்து தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் உறைவிடங்களில் இருப்பதுவரை பாதுகாப்பு நடவடிக்கைகள் இருக்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் உறைவிட வசதியில்லாமல் தங்க வைக்கப்படுகின்றார்களோ, அங்கே எடுக்கப்படும் அபாய மதிப்பீடு தொடர்புகளை அணுகுதல், உள்ளூர் காவல்துறையின் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் உட்பட பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அத்துடன் சேவை வழங்குவோர்கள் முன் எழுப்பப்பட்டுள்ள பாதுகாப்பு சவால்களை கருத்தில் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பைப் பற்றிய விளக்கங்கள் தரவேண்டுமென்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களுக்கும் அபாயத்தைப் பற்றி அன்றைய தேதிவரை தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்பதும் அவசியமானதாகும்.[17] பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது சூழ்நிலைகளைப் பற்றிய தகவல்கள் 'அறிந்து கொள்ளும் தேவை' உள்ளது என்ற அடிப்படையில் மட்டுமே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். இதன் பொருள் என்னவென்றால் தங்களது பாதுகாப்பு வேலையைச் செய்யவேண்டிய நோக்கத்தின் தேவைக்காக மட்டும் தகவல்கள் ஊழியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

! எச்சரிக்கை:

ஆள்கடத்தல்காரர்கள் உதவித் திட்டங்களை ஊடுருவவோ அல்லது பாதிக்கப் பட்டவர்களின் இருப்பிடத்தைப் பற்றிய தகவல்களைப் பெறவோ முயற்சிக்கும் அபாயம் உள்ளது. சேவை வழங்குவோர்கள் இந்த அபாயத்தில் விழிப்புடன் இருந்து, எந்தத் தகவல்களையும் அடையாளங்களோ, சான்றுகளோ தெரியாத நபர்களிடம் வெளியிடக்கூடாது.

கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடியிருப்புகளில் அல்லது அவர்களது தேவைக்கேற்றவகையில் மற்ற இடங்களில் பாதுகாப்பான இடவசதி வழங்கலாம். அத்துடன் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும். குடிவரவு தடுப்புக்காவல் மையங்கள், சிறைகள் அல்லது மூடப்பட்ட இடவசதிகள் போன்று எங்கெல்லாம் அவர்களால் சுதந்திரமாகத் திரிய முடியாதோ, அதுபோன்ற பூட்டப்பட்ட இடவசதியில் வைத்திருக்கக்கூடாது.[18]

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை மற்றும் சுகாதாரப் பராமரிப்புக் கிடைத்தல், அத்துடன் சட்டம் மற்றும் புலம்பெயர்வில் உதவி மற்றும் ஆதரவு தேவைப்படலாம்.

உதவிக்குறிப்பு: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிந்தனைக்கான நேரத்தைக் கொடுத்தல்

தங்களுடைய அனுபவங்களிலிருந்து மீள ஆரம்பிக்க உதவும் வகையில் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிந்தனைக்கான நேரத்தைக் கொடுக்கவும். ஆள்கடத்தல்காரர்களுக்கு எதிராகக் குற்றவியல் நீதி செயல்முறையில் பங்கேற்க பாதிக்கப்பட்டோருக்கு விருப்பமிருக்கிறதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் நாடுகடந்த ஆள்கடத்தலால் பாதிக்கப் பட்டவர்களுக்கு தற்காலிக விசா உட்பட சிந்தனைக்கான நேரங்கள் மற்றும் அது தொடர்பான ஆதரவு போன்றவை வழங்கப்பட வேண்டும்.

[15] ழந்தைகளின் சிறந்த ஆர்வங்கள் என்ன என்பதைத் தீர்மானிப்பதற்கு அவர்களை ஆலோசனை கேட்க வேண்டும். குழந்தையின் உரிமைகள் குறித்த உடன்படிக்கை சட்டவிதி 12 (CRC) குழந்தையின் கருத்துக்களுக்கு அவர்களின் வயது மற்றும் முதிர்ச்சிக்கு ஏற்ப உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கிறது. குழந்தைகளிடம் ஆலோசனை கேட்கும்போது, அவர்களது அந்தரங்க உரிமை, குடும்பம் அல்லது தொடர்புகளில் தன்னிச்சையான அல்லது சட்டவிரோத குறுக்கீடுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்து CRC-இன் சட்டவிதி 16-ஐயும் அத்துடன் தகவல்களை அடையக்கூடிய குழந்தைகளின் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கும் மாநில கடமைகள் பற்றிய சட்டவிதி 17-ஐயும் கருத்தில் கொள்ள வேண்டும்.

[16] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தையைப் பாதுகாப்பது பற்றிய வழிகாட்டுதல்கள், யுனிசெப் தொழில்நுட்பக் குறிப்புகள், யுனிசெப், 2006 பக்கங்கள் 16-17-ஐப் பார்க்கவும்.

[17] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி உதவி பற்றிய புலம் பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்புக் கையேடு, புலம் பெயர்தலுக்கான பன்னாட்டு அமைப்பு., 2005, பிரிவு 4.2.6-ஐப் பார்க்கவும்.

[18] மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (E/2002/68/Add.1), ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான உயர் ஆணையர், வழிகாட்டி 6(1).

இயல்பாகவே அதிர்ச்சிக்குள்ளாக்கும் இயல்புள்ள இந்த வகையான குற்றங்களின் காரணமாக, ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது அனுபவங்களிலிருந்து மீள ஆரம்பிக்கவும், விசாரணையில் அல்லது வழக்கில் உதவுவதா இல்லையா என்பதைப்பற்றி ஒரு முடிவெடுக்கவும், ஒரு 'சிந்தனைக்கான நேரம்' கொடுக்கப்பட வேண்டும் என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது. சிந்தனைக்கான நேரம் மாநிலங்களுக்கிடையே மாறுபடும். அத்துடன் அது பொதுவாக 30 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை இருக்கும்.[19] ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் மாநிலத்துக்குள் விதிக்குப் புறம்பான அந்தஸ்தில், குடியுரிமை அல்லாதவர்களாயிருக்கும் பட்சத்தில் கூடுதல் சவால்கள் எழும். சிந்தனைக்கான காலக்கட்டத்தில் அந்த நபர் நாட்டில் தங்கியிருப்பதைச் சாத்தியமாக்க வெளிநாட்டினருக்கான பாதுகாப்புத் திட்டத்தில் தற்காலிக விசா ஏற்பாடுகள் தேவைப்படலாம்

பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான உதவி அத்துடன் மீளுவதற்கும் மற்றும் அவர்களுடைய எதிர்காலம் தொடர்பான முடிவெடுக்க கால அவகாசமும் கொடுக்கப்பட்டால், அவர்கள் இறுதியில் அதிக விருப்பத்துடன் குற்றவியல் நீதி செயல்முறைக்கு ஆதரவளிக்க முடியும். பல மாநிலங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாட்டிலே தங்கியிருக்க அனுமதியளித்து, நிரந்தர விசாக்கள் வழங்க ஏற்பாடு செய்கின்றன. எடுத்துக்காட்டாக, பாதிக்கப்பட்ட ஒருவர் ஆள்கடத்தல்காரர்களின் விசாரணை மற்றும்/ அல்லது வழக்கில் பங்களிப்பு செய்திருந்தால், அவருடைய பிறந்த நாட்டுக்குத் திரும்ப நேரும்போது, ஆபத்தில் சிக்கிக்கொள்வார்.

உதவிக்குறிப்பு: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப்பாதுகாப்பதற்கான முக்கிய கொள்கைகளைப் பின்பற்றுதல்

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் (OHCHR) மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள், மாநிலங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுக்கு இடையேயான மற்றும் அரசு சாரா அமைப்புகள் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளுமாறு வழிகாட்டுதல் 6 அறிவுறுத்துகிறது:

- **பாதிக்கப்பட்டவர்கள் எந்த வகையிலான குடிவரவு அல்லது பிற தடுப்புக்காவல் நிலையத்திலும் நிறுத்திவைக்கப்படக்கூடாது என உறுதிப்படுத்துவது**
- **பாதிக்கப்பட்டவர்கள் எந்தவிதமான பாதுகாப்பு அல்லது உதவிச் சேவைகளை, தாங்கள் பெறச் சம்மதம் தெரிவிக்காத நிலையில், ஒப்புக்கொள்ளத் தேவையில்லை என உறுதிப்படுத்துவது**
- **பாதிக்கப்பட்டவர்களின் நாட்டைச் சேர்ந்த மாநிலத்தின் இராஜாங்க மற்றும் தூதரகப் பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்ளும் உரிமையைத் தெரிவித்தல்**
- **பாதிக்கப்பட்டவர்களின் அந்தரங்க உரிமையை மதிப்பது மற்றும் அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் இருப்பது உட்பட பாதிக்கப்பட்டவர்களை ஆள்கடத்தல்காரர்களிடமிருந்து வரும் அச்சுறுத்தல்கள், தீங்கு அல்லது எதிர்த்தாக்குதல் போன்றவைகளில் இருந்து பாதுகாத்தல்.**

2.2. குற்றவியல் நீதி செயல்முறை மூலம் பாதுகாப்பு

பாதிக்கப்பட்டவர்களைக் குற்றவியல் நீதி செயல்முறையில் பங்கேற்கக் கட்டாயப்படுத்தக்கூடாது. ஆனால் விருப்பமுண்டா, இல்லையா என்பதைத் தெரிவு செய்யும் அதிகாரம் அவர்களுக்கு வேண்டும். ஆள்கடத்தல்காரர்கள் மேல் உள்ள விசாரணை மற்றும் வழக்கில் பங்களிக்க விருப்பமும், திறனும் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு, குறிப்பாக பாதுகாப்பைக் கருத்தில் கொள்வது பொருந்தும்.

மனிதக்கடத்தலுக்கான குற்றங்கள் மற்றும் அவை தொடர்பான குற்றங்கள் உறுதியான ஆதாரங்கள் இல்லாத நிலையில், பெரும்பாலும் சாட்சியின் வாக்குமூலத்தை நம்பியிருக்கின்றன. இதன் பொருள் என்னவென்றால், பாதிக்கப்பட்டவர்களின் பங்கு இல்லாமல் அவை வெற்றியடையும் சாத்தியமில்லை. பாதிக்கப்பட்டவர் ஒருவர் நம்பத்தகுந்த சாட்சியத்தைத் தர இயலாமல் போனாலோ, அல்லது சாட்சியமே கொடுக்கத் தயங்கினாலோ, அது வழக்கு நடத்தும் வாய்ப்பு அல்லது விசாரணையின் விளைவையோ மோசமாகப் பாதிக்கலாம். அத்துடன் தண்டனையை உத்தரவாதம் செய்யும் மாநிலத்தின் வாய்ப்புகளைப் நெருக்கடிக்குள்ளாக்கும்.

பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நடைமுறைகள் மூலமாக திருப்தி அடைய ஆதரவு இல்லாத சமயத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயனுள்ள தீர்வுக்கான வாய்ப்பினை வழங்கும் மாநிலத்தின் திறன் பாதிக்கப்படலாம்.[20] குற்றவியல் நீதி செயல்முறை முழுவதிலும் ஒவ்வொரு நிலையிலும் உரிய ஆதரவு மற்றும் பாதுகாப்பு, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்வது,

[19] எடுத்துக்காட்டாக, கேத்தி ஸிம்மர்மேன் மற்றும் பலர், களவாடப்பட்ட புன்னகைகள்: ஐரோப்பாவிற்குக் கடத்தப்பட்ட பெண்கள் மற்றும் இளம் பருவத்தினர் உடல் மற்றும் உளவியல் சுகாதார விளைவுகள், லண்டன் பள்ளி-சுகாதாரம் மற்றும் வெப்பமண்டல மருத்துவம், 2006, பக்கம் 3-ஐப் பார்க்கவும்.

[20] மேற்கண்டதில் பிரிவு 1.1-இல் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க மாநிலத்தின் கடமைகள் மற்றும் பிரிவு 2.1-ஐ அவர்களுடைய நலன்களுக்காகப் பார்க்கவும்.

குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மட்டுமே முக்கியமானது என்றில்லாமல், அவர்களது பாதுகாப்பான, பயனுள்ள மற்றும் மதிப்புமிக்க பங்களிப்பை ஆள்கடத்தல்காரர்கள் மேலுள்ள வழக்குகளில் செலுத்தவும் தேவைப்படுகிறது.

உதவிக்குறிப்பு: குற்றவியல் நீதி செயல்முறை முழுவதும் அபாய மதிப்பீடுகளைச் செய்தல்

பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்புத் தேவைகள் விசாரணைகளுக்குமுன், விசாரணைகளின்போது மற்றும் விசாரணைகளுக்குப்பின் மாறுபடும். அதன்படி, மாநிலங்கள் அபாய மதிப்பீடுகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் அவர்களின் மாறும் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்ப திறம்பட தீர்வுகாண்கிறதா என்பதை செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் உறுதி செய்வது சிறந்த நடைமுறையாகும்.

விசாரணைக்கு முந்தைய பாதுகாப்பு

தங்களுக்கு ஒரு பயனுள்ள தீர்வு பெறுவதற்கு ஒரு பகுதியாக, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றவியல் நீதி செயல்முறையில் பங்கேற்பதன் மூலம் நீதியைப் பெற விரும்பலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அவர்கள் வாதிகளாகவும், சாட்சிகளாகவும் சம்பந்தப்படுவார்கள். அதன் பொருள் என்னவென்றால் விசாரணைகளிலும் மற்றும், சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற நடைமுறைகளிலும் அவர்கள் ஆஜராக வேண்டியதிருக்கும் என்பதாகும்.

விசாரணையின்போதும், வழக்கு தயாரிப்பு நிலையின் போதும் வழக்கு தொடங்கும் முன்பு, பாதுகாப்பின் ஒரு முக்கியகூறு ஆரம்பிக்கிறது. எடுத்துக்காட்டாக, என்ன நடந்துகொண்டிருக்கிறது, செயல்முறைகள் எவ்வளவு காலம் எடுக்க வாய்ப்பிருக்கிறது, அவர்களுடைய சொந்த உடைமைகளை ஆதாரங்களுக்குப் பயன்படுத்துவதற்காக ஏன் அவர்களிடமிருந்து எடுத்துச் செல்லக்கூடும் மற்றும் எப்போது அந்த பொருட்கள் திருப்பிக் கொடுக்கப்படும் என்பதை விளக்கிக் கூறுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஆலோசனை மற்றும் பிற உணர்ச்சிபூர்வமான ஆதரவின் மூலம் சாட்சிகள் என்ற வகையில் ஆதாரங்களை வழங்குவது உள்ளிட்ட முன்விசாரணைக் கட்டத்தில், பாதிக்கப்பட்டவர்கள் விசாரணைக் கட்டத்துக்குத் தயாராக இருக்க முடியும். இந்த ஆதரவு விசாரணைக் கட்டத்திலும் தொடர வேண்டும்.

சில மாநிலங்களில், விசாரணைகளுக்கு முன்பு, தாக்குதலுக்கு ஆளாகக்கூடிய பாதிக்கப்பட்டவர்கள்-சாட்சிகளுக்கு ஆதரவு வழங்குவதில் சட்டத் தேவைகள் உள்ளன. அத்தகைய ஆதரவில், விசாரணைக்கு பாதிக்கப்பட்டவரைத் தகுதிவாய்ந்த ஒரு நபரைப் பயன்படுத்தித் தயார் செய்வதும், நீதிமன்ற அறைக்கு அழைத்துச் செல்வது, நீதிமன்ற நடைமுறைகளை விளக்கிக் கூறுவது அத்துடன் அவர்கள் கேட்கும் கேள்விகளைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவது போன்றவையும் அடங்கும்.

எங்கே பொருத்தமாகவும், பிரதிவாதிகளின் உரிமைகளுக்கு இசைவாகவும் இருக்கிறதோ அங்கே, ஆள்கடத்தல்காரர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களின் விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவல், பாதிக்கப் பட்டவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் எதிர்த்தாக்குதலில் இருந்து பாதுகாக்க உதவக்கூடும். அத்தகைய விசாரணைக்கு முந்தைய தடுப்புக்காவல், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் ஓர் அதிகரித்த பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கக்கூடும். அத்துடன் ஆள்கடத்தல்காரர்கள் என சந்தேகிக்கப்படுபவர் ஆதாரங்களை திரிவுபடுத்துவதையோ அல்லது பாதிக்கப்பட்ட அல்லது மற்ற சாட்சிகளின் மீது செல்வாக்கைப் பயன்படுத்துவதையோ தடுப்பதன் மூலம் ஒரு

உதவிக்குறிப்பு: மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் விசாரணைக்கு முந்தைய ஆதரவை வழங்குதல்

மனிதர்களைக் கடத்துதல் நெறிமுறையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் விசாரணைக்கு முந்தைய ஆதரவுக்கான குறைந்தபட்ச தரங்களை வரையறுக்கின்றன. அந்த ஆதரவை வழங்குவதில் ஒரு முறைசார்ந்த வழிமுறையை மாநிலங்கள் வைத்திருக்க வேண்டும். திறமையான அரசு சாரா நிறுவனங்கள் அத்துடன் குற்றவியல் நீதி அமைப்பைப் புரிந்து கொண்டிருக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குவதில் சிறப்பு பயிற்சி பெற்றிருக்கும் சிவில் சமுதாய அமைப்புகள் அத்தகைய ஆதரவுச் சேவைகளை வழங்குவதில் உதவ முடியும்.

நியாயமான விசாரணைக்கான வாய்ப்புகளை வலுப்படுத்தக்கூடும்.[21]

ஆரம்பப் புலனாய்வுக்கும், விசாரணைக்கும் இடையில், நாடுகடந்த, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் பிறந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டுமா என்பதைப் பற்றிய முடிவுகள் பாதிக்கப்பட்டவர்களின் சிறந்த நலன்களைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட வேண்டும்.

அத்தகைய முடிவுகள் பிறந்த நாட்டின் பாதுகாப்பு வழிமுறைகளைச் சார்ந்ததாக இருக்கலாம், எங்கே விசாரணை நடக்கவிருக்கிறதோ அந்த நாட்டுக்கு பாதிக்கப்பட்டோரை கொண்டுவரும் இடம்பெயர்வுச் சாத்தியக்கூறு சார்ந்ததாக இருக்கலாம் அல்லது தொலை சாட்சியம் (சாட்சியின் அந்தரங்க உரிமையைப் பாதுகாக்கும் வகையில் இணையத்தை அல்லது பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியோ) வழங்குவதன் சாத்தியக்கூறு சார்ந்ததாக இருக்கலாம். சாட்சியம் கொடுக்க நடைமுறைக்குச் சாத்தியமில்லாத அல்லது பொருத்தமில்லாத தருணங்களில் சாட்சி அறிக்கைகள் பயன்படுத்தப்படலாம்.[22]

[21] குற்றவியல் நீதி நடைமுறைப்படுத்துவோருக்கான மனிதக் கடத்தல் தடுப்புப் பயிற்சிக் கையேடு, தொகுதி 11: மக்கள் கடத்தல் வழக்குகளில் குற்றவியல் நீதி நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள். UNODC/UN.GIFT, 2009, பக்கம் 8.

[22] குற்றவியல் நீதி நடைமுறைப்படுத்துவோருக்கான மனிதக் கடத்தல் தடுப்புப் பயிற்சிக் கையேடு, தொகுதி 11: மக்கள் கடத்தல் வழக்குகளில் குற்றவியல் நீதி நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள். UNODC/UN.GIFT, 2009, பக்கங்கள் 7-8.

விசாரணையின்போது பாதுகாப்பு

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோருக்கு, நீதிமன்றத்திற்குச் செல்வது ஒரு கடினமான அனுபவமாகும். பயத்தையும், பதற்றத்தையும் அதிகரிக்கும் நீதிமன்றத்தில் சாட்சியளித்தல் போன்ற விசாரணை செயல்பாடுகளின் தன்மைகள் முடிந்த அளவுக்கு குறைக்கப்பட வேண்டும்.

ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுப்பதில் உதவிபுரிய, சில மாநிலங்கள் மென்மையான சாட்சி நடவடிக்கைகளையும், வாக்குமூல சாதனங்களையும் ஏற்பாடு செய்துள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள், அச்சுறுத்தல், கூடுதல் அதிர்ச்சி, சொந்த பாதுகாப்பு பயம் மற்றும்/அல்லது தேவையற்ற பொது சங்கடம் போன்ற அபாயங்களைக் குறைப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் சிறந்த சாட்சியத்தை நீதிமன்றத்தில் பதிவுசெய்வதை உறுதிப்படுத்தும் நோக்கம் கொண்டன. வெளிப்படைத்தன்மைதான் உரிய வழிமுறைகளின் அடிப்படைக்கூறு என்றிருந்தாலும் அது குற்றவியல் நீதி நடவடிக்கைகளில் பங்கேற்பவர்களின் உரிமை, அதேசமயம் தேவையற்ற துன்பம் அல்லது பொது சங்கடத்திலிருந்து பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் இரண்டையும் சமநிலைப்படுத்த வேண்டும். குற்றவியல் நீதி அமைப்புகளில் பங்கேற்கும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் நியாயமானதாகவும், தேவையானதாகவும் மற்றும் தேவையான அளவிலும் இருக்க வேண்டும்.

> **உதவிக்குறிப்பு:** குற்றவியல் நீதி செயல்முறை முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தருதல்
>
> **நீதிமன்ற நடவடிக்கைகளில் சாட்சிகளாக இருப்பவர்கள் உட்பட பாதிக்கப் பட்டவர்களுக்கு, அவர்கள் புரியும்படியான மொழியில், அவர்களுக்கான விருப்பத்தின்படி, முழுமையான தகவல்களை மாநிலங்கள் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களின் சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிந்துகொள்ள உதவிடும் வகையில் சுயேச்சையான சட்ட ஆலோசகரைச் சந்திப்பதற்கான வாய்ப்பை, மாநிலங்கள் வழங்க முயல வேண்டும்.**

குறிப்பாக நியாயமான, பொது விசாரணையில், அவை பிரதிவாதியின் உரிமைகள் மீதும் பாதிக்கும் என்பதை மாநிலங்கள் மனதில் கொள்ள வேண்டும். தாக்குதலுக்கு ஆளாகக்கூடிய ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் சாட்சிகளையும் விசாரணையின்போது பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூல சாதனங்களில் பின்வருவன அடங்கும்:

- பாதிக்கப்பட்டவர் உள்ளரங்கு தொலைக்காட்சி அல்லது வீடியோ இணைப்பில் சாட்சியம் கொடுப்பதற்கு அனுமதிப்பது
- பிரதிவாதி மற்றும் பொதுமக்களுடன் பாதிக்கப்பட்டவரின் தொடர்பை, திரைகளைப் பயன்படுத்துவது அல்லது நீதிமன்ற அறைகளை மூடுவது உள்ளிட்ட வகையில் கட்டுப்படுத்துவது
- பாதிக்கப்பட்டவர் சாட்சியம் அளிக்கும்போது ஆதரவான ஒரு நபர் உடனிருப்பதற்கு அனுமதிப்பது
- ஒரு அசல் விசாரணையின்போது கொடுக்கப்பட்ட பாதிக்கப்பட்டவரின் சாட்சியத்தை, மறுபடியும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் அபாயத்தைக் குறைக்கும் வகையில், பின்வரும் விசாரணைகளின்போதும் அனுமதிக்க விதிகளை அறிமுகம் செய்தல்
- நீதிமன்றத்தில் கலந்து கொள்வதற்காகப் பயணம் மேற்கொள்வது தீங்கு, அதிர்ச்சி அல்லது தேவையற்ற துன்பத்தை விளைவிக்கும் என்றால், வெளிநாட்டிலுள்ள பாதிக்கப்பட்டவர்களை வீடியோ இணைப்பு மூலம் சாட்சியம் சொல்ல அனுமதிப்பது
- பாதிக்கப்பட்டவரின் பெயரை அங்கீகாரம் பெறாமல் வெளியிடுவது அல்லது குணநலன்களை அடையாளப்படுத்துவது தொடர்பானவைகளைக் குற்றச்செயல் என விதி உருவாக்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் அந்தரங்க உரிமையைப் பாதுகாப்பது.

> **உதவிக்குறிப்பு:** ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், குழந்தை சாட்சிகளையும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்
>
> **தாக்குதலுக்கு ஆளாகக்கூடிய நபர்களின் பாதுகாப்புக்காக நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூல சாதனங்கள், பாதிக்கப்பட்ட குழந்தைக்கும் தானாக கிடைக்கும்படி உருவாக்க மாநிலங்கள் கருத்தில் கொள்ளலாம். பிரதான சாட்சியாக, பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும்/அல்லது குழந்தை சாட்சிகளின் காவல்துறை நேர்முகக் காணொளி பதிவுகளைச் சமர்ப்பிப்பதை அனுமதிப்பது போன்ற கூடுதல் பாதுகாப்புகளையும் கருத்தில் கொள்ளலாம். இருப்பினும், பாதிக்கப்பட்ட குழந்தைகள், குறிப்பாக அவர்கள் தீவிர அதிர்ச்சிக்கு ஆளாயிருந்தால், பங்கேற்கத் தேவையில்லை.**

பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகவல்களையும், நேருக்கு நேர் ஆதரவையும் வழங்கி, அத்துடன் அவர்களுடன் நீதிமன்றத்தில் கலந்துகொண்டு, அவர்களின் மன அழுத்தத்தையும், அதிர்ச்சியையும் குறைக்க, குறிப்பிட்ட சாட்சி உதவி அல்லது பாதிக்கப்பட்டோர் தொடர்பு அதிகாரிகளை சில மாநில அரசுதரப்பு சேவைகள் நியமிக்கின்றன. சிவில் சமூக அமைப்புகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மதிப்பான கூடுதல் பராமரிப்பு மற்றும் ஆதரவை அவர்களின் வழக்கு நடக்கும்போது வழங்குகின்றன.

ஒரு தீர்ப்பு எட்டப்பட்டு, குற்றவாளிகளுக்கு, அவர்களால் விளைவிக்கப்பட்ட தீங்கினை நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்படும் பொருட்டு தண்டனை அளிக்கப்படும்போது, பாதிக்கப்பட்டவர்கள் தன்னிச்சையான பாதிப்புத் தாக்க வாக்குமூலங்களைத் தருவதை மாநிலங்கள் அனுமதிப்பதைப் பற்றிப் பரிசீலிக்கலாம். பாதிப்புத் தாக்க வாக்குமூலங்கள் எவ்வாறு அந்த குற்றம் அவர்களை உடல்ரீதியாக, உணர்வுபூர்வமாக, நிதியியல்ரீதியாக மற்றும்/அல்லது சமூகரீதியாக பாதித்தது என்பதை நீதிபதியிடம் விளக்க பாதிக்கப்பட்டவர்களை அனுமதிப்பது உட்பட அவர்களது மீட்புச் செயல்முறையிலும் நன்மை விளைவிக்கக்கூடும். பாதிப்புத் தாக்க வாக்குமூலங்கள் பின்வருவனவற்றுக்கும் கூட நன்மை பயக்கலாம்:

- குற்றவியல் நீதி செயல்முறையில், பாதிக்கப்பட்டவரைத் தனிமைப்படுத்துவதில் பொதுமக்கள் கண்ணோட்டத்தைக் குறைப்பது
- தண்டனை கொடுத்தலை மிகவும் வெளிப்படையாகவும், குற்றத்துக்கு எதிராக சமுதாயத்தின் எதிர்வினையைப் பிரதிபலிக்குமாறும் செய்தல்
- ஆள்கடத்தல்காரர்களின் புனர்வாழ்வை அவர்களின் குற்றத்தின் தாக்கத்துடன் எதிர்கொள்ள ஊக்குவித்தல்

பாதிப்புத் தாக்க வாக்குமூலங்களின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டிருக்கும் மாநிலங்கள் பாதிக்கப்பட்டவர்கள் பொருத்தமான தண்டனையைப் பற்றி வெளிப்படையாக ஒரு கருத்து வழங்குவதிலிருந்து விலக்குவது; அல்லது தங்களுடைய வாக்குமூலத்தில் தாக்கும், அச்சுறுத்தும், மிரட்டும் அல்லது தொல்லை கொடுக்கும் விஷயங்களைச் சேர்க்காமல் விலக்குவது உட்பட சில பாதுகாப்புகள் இருப்பதாக உறுதி செய்ய வேண்டும். பாதிப்புத் தாக்கு வாக்குமூலத்தில் உள்ளடங்கிய உண்மைகளைச் சோதிக்க ஆள்கடத்தல்காரர்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டும்.

உதவிக்குறிப்பு: உதவியும், பாதுகாப்பு நடவடிக்கைகளும் பங்கேற்பதற்கான ஊக்குதல்கள் இல்லை என்பதை உறுதிசெய்யவும்

குற்றவிசாரணை வழக்கை அடியோடு தகர்க்கும் எந்த வடிவிலான ஊக்குதலும் இல்லை என்ற வகையில் உதவியும், பாதுகாப்பு நடவடிக்கைகளும் வழங்கப்பட வேண்டும். சாட்சிகளுக்கு வழங்கப்படுவதெல்லாம், உறைவிடம் மற்றும் விசா உட்பட எதுவும் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் நியாயமான முறையில் இருக்க வேண்டும், அத்துடன் ஆதரவைத் தவறாகப் பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டால், உடனடியாக கவனிக்கப்பட வேண்டும்.

விசாரணைக்குப் பிந்தைய பாதுகாப்பு

குற்றவியல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தாலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுத்தக்கூடாது. ஆனால் அவை தனிப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் உண்மையான தேவைகளை அடிப்படையாக் கொண்டிருக்க வேண்டும். வழக்கு முடிந்த உடனே, சாட்சி உதவி அலுவலர்கள் அல்லது அதற்கான மற்ற அதிகாரிகள் கடத்தல்காரர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை. அதன் கால அளவு மற்றும் ஆள்கடத்தல்காரர் விடுதலையாகக்கூடிய தேதி அத்துடன் மேல்முறையீட்டுக்கான சாத்தியக்கூறுகள் உட்பட விசாரணையின் முடிவு பற்றிய தகவல்கள் மற்றும் அதன் தாக்கங்களைப் பற்றிப் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கூறவேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புத் திட்டம் பாதிக்கப்பட்டவர்களின் ஆலோசனையுடன் மற்றும் அவர்களின் கவலைகளையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வழக்குத் தொடுப்புக்குப் பின், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினர் அல்லது நண்பர்களுக்கு அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டுதல்கள் அதிகரிக்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் பிறந்த நாட்டிலிருந்து திரும்பும்போது அவர்களுக்கு ஆபத்து இருந்தால், பாதிக்கப்பட்டவர்களை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக இருக்க அனுமதிப்பது உட்பட தொடர்ந்த சாட்சி பாதுகாப்புக்கான தேவையை மாநிலங்கள் பரிசீலிக்க வேண்டும்.[23] பதிலடி அல்லது மீண்டும் கடத்தல் போன்ற அபாயத்துக்கு அப்பால், பிறந்த மாநிலத்தின் பற்றாக்குறை உதவி மற்றும் ஆதரவினால் எழும் அபாயங்களின் மதிப்பீடே பாதிக்கப்பட்ட ஒருவர் திரும்பச் செல்ல வேண்டுமா அல்லது விசாரணை நடைபெறும் நாட்டிலே அல்லது வேறெங்கும் குடியேற்ற அனுமதி வழங்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கப் போதுமானது ஆகும்.[24]

[23] நிலையான பாதுகாப்புத் தீர்வுகள் பிரிவு 3.3-ஐ கீழே பார்க்கவும்.

[24] நிலையான பாதுகாப்புத் தீர்வுகள் பிரிவு 3.3-ஐ கீழே பார்க்கவும்.

2.3. நீடித்த பாதுகாப்புத் தீர்வுகள்

தற்காலிக உறைவிடம், மருத்துவப் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் போன்ற உடனடித் தேவைகளைக் கவனிப்பதன் மூலம் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட ஆள்கடத்தல் நபர்களின் தேவைகள் மதிப்பீடு செய்யப்படும்போது, நீடித்த பாதுகாப்புத் தீர்வுகள் முதல் தொடர்புப் புள்ளியில் இருந்து தொடங்கும். பிறந்த, பயணிக்கின்ற அல்லது செல்லுகிற மாநிலங்களில் அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். 'பாதுகாப்புத் தேவைகள்' என்பது ஆள்கடத்தல்காரரின் பிடியிலிருந்து பாதிக்கப்பட்டவரை விடுவிப்பது, எந்த உடனடி அபாயங்களை மட்டுப்படுத்துவது போன்றவைகளில் ஈடுபட்டிருந்தாலும் 'நீடித்த பாதுகாப்புத் தீர்வுகள்' கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் சுயஉரிமையை மீட்டுத்தர உதவுவது போன்ற உடனடித் தேவைகளைத் தீர்ப்பது மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைய அல்லது மீண்டும் ஒன்றிணைய அவர்களுக்கு அதிகாரமளிப்பதையும் தாண்டி முழுமையானவை.

ஆரம்பத்தில் கடத்தல் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்திய சூழ்நிலைகளைத் தவிர்க்க, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீண்டகால வாய்ப்புகளைப் பெறுவதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை நீடித்த பாதுகாப்புத் தீர்வுகள் கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, கல்வி, பயிற்சி, வாழ்வாதாரம் மற்றும் வேலை வாய்ப்புகளைப் பெறுதல், பாதிப்புகளைக் கருத்தில் கொள்வது மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் சமூக, பொருளாதார மறு ஒருங்கிணைப்புக்கு ஆதரவளித்தல் போன்ற சேவைகளாகும். முதல் தொடர்புப் புள்ளியில் அடையாளம் காணப்பட்ட சில தீர்வுகள் நீடித்திருக்க வேண்டியிருக்கலாம் அல்லது தொடர்ந்த குடியிருப்பு, மருத்துவ மற்றம் உளவியல் சிகிச்சை மற்றும் ஆலோசனை, அத்துடன் பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் போன்று தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டியதிருக்கலாம்.

எந்தவொரு பாதிக்கப்பட்டோர் உதவி அல்லது பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதிக் குறிக்கோளும் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டு உதவிபெறுபவர்கள் தன்னிறைவு அடைய, பொருளாதார, சமூக வாழ்வில் முழுமையாகப் பங்கேற்க தாங்கள் ஏற்கனவே அனுபவித்தவற்றில் இருந்து தீர்வை உறுதி செய்வதாகும். இந்தக் குறிக்கோளை அடையத் தவறும்போது மேலும் பாதிப்பு அதிகரித்து மறுபடியும் மறுபடியும் பாதிக்கப்படும் நிலை ஏற்படக்கூடும்.

ஆள்கடத்தல் எல்லைகளுக்கு அப்பால் நடக்கும்போதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் சேவைகளை வழங்குவோர் இடையே ஒருங்கிணைக்க வேண்டிய சூழ்நிலையிலும், நீடித்த பாதுகாப்புத் தீர்வுகள் மிகவும் சிக்கலானவை. சிந்தனைக்கான நேரம் அல்லது நீதிமன்ற விசாரணைகளின் முடிவைத் தொடர்ந்து, ஒருங்கிணைப்புக்கான தெரிவுகள், தன்னிச்சையாகத் திரும்ப வருதல் அல்லது மறு ஒருங்கிணைப்பு போன்றவை ஆராயப்பட வேண்டும்.[25] பாதிக்கப்பட்டவர்களுக்குக் குடியுரிமையோ அல்லது வேறுவகையில் தங்குவதற்கான விசாவோ வழங்கப்படவில்லையென்றாலோ அல்லது வேறொரு மாநிலத்துக்கு அனுப்பப்படவில்லையென்றாலோ, அவர்கள் தங்கள் பிறந்த சொந்தச் சமுதாயத்துக்கு திரும்பலாம். பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் பிறந்த சொந்தச் சமுதாயத்துக்கு திரும்பினால் – அது சொந்த மாநிலமோ அல்லது வேறொரு மாநிலமோ – அவர்கள் சென்று இறங்கும்போது மற்றும் மறு ஒருங்கிணைப்புச் செயல்முறையின் போது, எதிர்த்தாக்குதலில் அல்லது மீண்டும் ஆள்கடத்தலில் சிக்காமல் இருந்து பாதுகாப்பை உறுதிசெய்ய அதிகாரிகள் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

பிறந்த நாட்டுக்குத் திரும்புவது, கூடுமானவரை, தன்னிச்சையாக இருக்க வேண்டும். மேலும் அது திரும்புவோரின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தின் பேரில் நடத்தப்படவேண்டும். அத்துடன் மறு ஒருங்கிணைப்பைப் பெறுவதற்காகவும் மறுபடி ஆள்கடத்தலைத் தடுப்பதற்காகவும் தேவையான போதிய பாதுகாப்பு, உதவி மற்றும் ஆதரவு வழங்குவது போன்ற அனைத்தும் அதில் அடங்கும்.[26] வேற்று மாநிலத்துக்கு இடம் மாறுவது பாதிக்கப்பட்டவர்களின் விருப்பமாக இருந்தால், குறிப்பிட்ட அந்த மாநிலம் பாதுகாப்பான இடமாற்றத்துக்கும் மற்றும் ஒருங்கிணைப்புக்கும் வசதி செய்து உதவ வேண்டும்.[27] தொடர்ந்த பாதுகாப்புப் பிரச்சினைகள், மனிதாபிமானக் கருத்துக்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் திரும்புவதைத் தடைசெய்யும் மற்ற அபாயங்கள் இருந்தால், செல்லுகின்ற நாட்டில் தற்காலிக அல்லது நிரந்தர குடியுரிமை வழங்குவதைப் பரிசீலிக்க வேண்டும்.[28]

---

[25] மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (E/2002/68/Add.1), ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான உயர் ஆணையர், வழிகாட்டி 5(8).

[26] மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (E/2002/68/Add.1), ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான உயர் ஆணையர், வழிகாட்டி 6(8). பாதுகாப்பாக திரும்புதல் குறித்து மக்களைக் கடத்துதல் நெறிமுறையில் சட்டவிதி 8(3)-(4), சட்டவிதி 9(1)(பி)-ஐயும் பார்க்கவும்.

[27] மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (E/2002/68/Add.1), ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான உயர் ஆணையர், வழிகாட்டி 6(8). பாதுகாப்பாக திரும்புதல் குறித்து மக்களைக் கடத்துதல் நெறிமுறையில் சட்டவிதி 8(3)-(4), சட்டவிதி 9(1)(பி)-ஐயும் பார்க்கவும்.

[28] மனித உரிமைகள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கான விளக்கவுரை OHCHR, 2010, பக்கங்கள் 180-182-ஐப் பார்க்கவும்.

நீடித்தப் பாதுகாப்புத் தீர்வுகளுக்குப் பல்வேறு சேவை வழங்குவோர்கள் மற்றும் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. சேவைகள் பொருத்தமானவை அத்துடன் சரியான நேரத்திலும், ஒருங்கிணைந்த முறையிலும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும், அத்துடன் அவை பிறந்த மற்றும் செல்லுகின்ற மாநிலைங்களுக்குள்ளே மற்றும் மாநிலங்களுக்கிடையேயும் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பரிந்துரைகளும் மற்றும் பின்னோட்டங்களும் முக்கியமானவையாகும். இதற்குப் பாதிக்கப்பட்டவர்களே வழங்கும் ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியமாகும். பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதில், தங்களுடைய பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளை மாத்திரம் அறிந்திருக்கவேண்டியது மட்டுமல்லாது, நீண்டகாலத் திட்டத்தின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் எந்த வகையான உதவி மற்றும் ஆதரவு முக்கியமானது என்பதைத் தீர்மானிப்பதில் அவர்களுடைய பங்களிப்பையும் அறிந்திருக்க வேண்டும். பாதுகாப்பு அணுகுமுறைகளின் வளர்ச்சியில், அதிலும் குறிப்பாக குழந்தைகளின் சிறந்த நலன்கள் பாதுகாப்புத் திட்டங்களில் முன்னணியில் இருக்க, தனிப்பட்ட தேவைகளுக்கும் மற்றும் ஆர்வங்களுக்கும் உரிய மரியாதை கொடுக்கப்பட வேண்டும். இறுதியாக உதவி மற்றும் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் அவ்வப்போது மதிப்பிடப்பட்டு அல்லது கணக்கிடப்பட்டு மற்றும் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்

அட்டவணை 1: நீடித்த பாதுகாப்புத் தீர்வுகளின் முக்கியக் கூறுகள்

அடிப்படைத் தேவைகள்	• தொடர்ந்த பாதுகாப்பான உறைவிடம், குறிப்பாக மறு ஒருங்கிணைப்பு இன்னும் உசிதமாய் இல்லாதபோது • பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் நடவடிக்கைகள்
மருத்துவ மற்றும் உளவியல் சமூகப் பராமரிப்பு	• உளவியல் ஆலோசனை • குடும்ப வருகைகள் உட்பட சமூக ஆலோசனை • மருத்துவ மற்றும் பல் பராமரிப்பு • குடும்பம் மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்புத் தலையீடுகள்
பொருளாதார மறு ஒருங்கிணைப்பு	• கல்வி, குறிப்பாகக் குழந்தைகளுக்காக • சமூகத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காக மொழிப்பயிற்சி • தொழிலாளர் சந்தை அல்லது வணிகத் தேவைகளின் அடிப்படையில் தொழிற்கல்வி அல்லது திறன்கள் பயிற்சித் திட்டங்கள் • பணியமர்த்துதலில் உதவி • வாழ்வாதார மானியங்கள் மற்றும் வழிநடத்துதல் • நிதி மானியங்கள்/தொடக்க மூலதனம் வழங்குதல்
சட்ட ஆதரவு மற்றும் உதவி	• சட்ட ஆலோசனை • சட்ட அமலாக்க மற்றும்/அல்லது வழக்கு விசாரணை அதிகாரிகள் முன் குற்றவியல் புகார்கள் மற்றும் பிற சட்டத்தீர்வுகளை தாக்கல் செய்தல் • இழப்பீடு பெறுவதில் உதவி • கிடைக்கும்போது, தற்காலிகமாக தங்கிட அனுமதி அல்லது நிரந்தரக் குடியுரிமைக்காக விண்ணப்பிப்பதில் உதவி • ஆள்கடத்தலின் விளைவாக செய்யப்பட்ட குற்றங்களிலிருந்து ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை விடுவிக்க பிரதிநிதித்துவம்.[29]

இழப்பீடு

நிலையான பாதுகாப்புத் தீர்வுகளை எளிதாக்கும் ஒரு முக்கிய வழிமுறையானது இழப்பீடு வழங்கல் மற்றும் நிதி உதவி, அல்லது ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் அனுபவித்த காயம், இழப்பு அல்லது தீங்கினை ஏற்றுக்கொண்டு இழப்பைச் சரிசெய்தல் மூலமாகத்தான். இழப்பீடு பாதிக்கப்பட்டவர்களின் கடத்தல் அனுபவத்தை ஈடு செய்ய முடியாது எனினும் அவர்களுடைய மீட்சிக்கான வாய்ப்புகளை அது மேம்படையச் செய்கிறது. அத்துடன் மீண்டும் ஆள்கடத்தலுக்கு ஆளாகும் பாதிப்பிலிருந்து பொருளாதாரரீதியில் பாதுகாக்கிறது. இழப்பீட்டில் சம்பள பாக்கி, சட்டஉதவிக் கட்டணங்கள், மருத்துவச் செலவுகள், இழந்த சந்தர்ப்பங்கள் அத்துடன் வலி மற்றும் துன்பத்துக்கான இழப்பீடும் அடங்கும்.[30]

[29] குற்றத்தன்மை இன்மையில் கூடுதல் விவரங்களுக்கு, மக்களைக் கடத்துதலில் குற்றத்தன்மை பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2014, பக்கம் 7-ஐப் பார்க்கவும்.

[30] குற்றம் மற்றும் அதிகார முறைகேட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நீதியின் அடிப்படைக் கொள்கைகள் பற்றிய ஐ.நா.வின் பிரகடனம், A/RES/40/34, 29 நவம்பர் 1685, (சட்டவிதிகள் 12 மற்றும் 13)-ஐ மேலும் பார்க்கவும்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுத் திட்டங்கள், ஆள்கடத்தல்காரர்களின் சொத்துக்களிலிருந்தோ அல்லது நீதிமன்ற செயல்பாடுகள் அல்லது நிர்வாக நடவடிக்கைகள் மூலமாக மாநில நிதித் திட்டங்களிலிருந்தோ நிர்வகிக்கப்படுகின்றன. அநேக சட்ட அதிகார வரம்புகளில், சேதங்களுக்கான சிவில் கோரிக்கை, ஒரு குற்றவியல் நடவடிக்கையைத் தாக்கல் செய்வது தொடர்பானது. அத்துடன் நிதி வழங்குவதும் நீதிமன்ற முடிவுகளில் உள்ளடங்கும், அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுப் பணம் அபராதத்தின் ஒரு பகுதியாக இருக்கும். இருப்பினும், மற்றவர்களுக்குக் குற்றவியல் வழக்கு இல்லாமல் சிவில் நடவடிக்கைகள் மூலமும் சேதங்களின் மீட்பு அனுமதிக்கப்படும். சம்பள பாக்கி மற்றும் பிற ஒப்பந்தரீதியான நன்மைகள் மூலமாக, குறிப்பாக சுரண்டலுக்கான ஆள்கடத்தல் வழக்குகளால், தொழிலாளர் நீதிமன்றம் மூலமாகக் கோரிக்கைகள் இழப்பீட்டுக்கு மற்றொரு வாய்ப்பாகும்.

ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் உள்ள சில நாடுகளில், பாதிக்கப்பட்டவர்கள் ஆள்கடத்தல் அனுபவங்களிலிருந்து மீளும்போது அவர்களுக்குப் பொருளுதவி அளிப்பதற்கு மாநில ஒதுக்கீட்டிலிருந்து நிதி உருவாக்கியுள்ளன. ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக குற்றவியல் தண்டனைகளின் விளைவாக விதிக்கப்பட்ட தண்டத்தொகை மற்றும் அபராதங்களிலிருந்து அறக்கட்டளைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே உள்ள கடுமையான குற்றங்கள் அல்லது வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நிதியைப் போன்ற பொது உதவி நிதியைப் பெற மற்றவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

தனியார் துறை அமைப்புகளின் தொழிற்துறைகள் அல்லது விநியோகச் சங்கிலிகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்படலாம். அவ்வமைப்புகள் சுரண்டலிருந்து தொழிலாளர்களை பாதுகாப்பதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதிலும் பங்கு வகிக்கின்றன. தேசிய நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள், வர்த்தக சமூகம் மற்றும் தனிநபர்களிடமிருந்து வரும் நன்கொடைகளால் மாநில நிதியைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறும் இதில் அடங்கும்.

பெரும்பாலான அதிகார வரம்புகள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை இழப்பீட்டைத் தொடர சிவில் நீதிமன்றங்கள் மூலம் (சமூக நலம் அல்லது தொழிலாளர் ஆட்சிமுறை வழியாக) அனுமதிக்கும்போது, விதிக்குப் புறம்பாக குடிபெயர்ந்தோர் தங்களுடைய குடிமை நிலையாலோ மற்றும்/அல்லது ஆவணங்கள் இல்லாததாலோ அத்தகைய இழப்பீட்டை அடையத் தடைகளைச் சந்திக்கலாம். அதன்படி, விதிக்குப் புறம்பான சூழ்நிலையில் உள்ள, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட தீங்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிவில் நீதிமன்றங்களை அணுக மாநிலங்கள் வசதி செய்து தரவேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுக்கு சாத்தியமான ஆதாரங்களைக் காண்பிக்கிறது.

வரைபடம் 1: பாதிக்கப்பட்டோர் இழப்பீட்டுக்குச் சாத்தியமான ஆதாரவளங்கள்



உதவிக்குறிப்பு: நீடித்த பாதுகாப்புத் தீர்வுகளின் ஒரு பகுதியாக பயனுள்ள இழப்பீடு வழங்குதல்

குற்றவியல் நீதி விசாரணைகளின் வெளியே ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் இழப்பீட்டுக்கான ஆதாரவளங்களை உருவாக்க மாநிலங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குடிமக்கள் அல்லாதவர்களுக்கு இழப்பீடு கிடைத்துள்ளதா என்பதை உறுதிசெய்வதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பிரிவு 3:

ஒருங்கிணைப்பு மற்றும் பல-பங்குதாரர் அணுகுமுறை

3.1. பாதுகாப்புப் பங்குதாரர்கள்

முழுமையான பாதுகாப்புக்கு ஒருங்கிணைப்பு ஒரு முக்கிய அங்கமாகும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட தனிநபரின் சிக்கலான பாதுகாப்புத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, நன்கு வடிவமைக்கப்பட்ட, பயனுள்ள நடவடிக்கைகளில் பல்வேறு நிபுணர்களும், தலையீடுகளும் அடங்கும். ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதில் உள்ள கடமை முக்கியமாக மாநிலங்களுக்கு உண்டு. ஆனால் மற்ற அமைப்புகள் இந்த செயல்பாட்டுக்கு ஆதரவளிப்பதில் பெரும் பங்களிக்கலாம்.[31] சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அதிகாரிகளுக்குமிடையே நம்பிக்கையை உருவாக்க நியமிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு சேவையை வழங்கத் தேவையான குறிப்பிட்ட நிபுணத்துவமும் அவர்களுக்கு உண்டு.

உதவி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பல பங்குதாரர்கள் ஒருங்கிணைப்பின் தேவையை மக்களைக் கடத்துதல் நெறிமுறை ஒப்புக்கொள்கிறது. மேலும் "அரசு சாரா நிறுவனங்கள், பிறதொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் மற்ற உறுப்புகளின் ஒத்துழைப்புடன்" கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் உடல், உளவியல் மற்றும் சமூக மீட்சியை வழங்கும் நடவடிக்கைகளை மாநிலங்கள் செயல்படுத்துவது அவசியம் என்கிறது.[32] காவல்துறை, குடியேற்ற மற்றும் சமூக சேவை அதிகாரிகள், அத்துடன் தொழிலாளர் மற்றும் தொழில்துறை சார்பான அமைப்புகள், உள்துறை மற்றும் வெளியுறவு அமைச்சகங்கள் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்டோர், குடிபெயர்ந்தோர், பெண்கள் மற்றும்/ அல்லது குழந்தைகளுக்கான சேவைகளில் நிபுணத்துவம் பெற்ற அரசு சார்பற்ற நிறுவனங்கள் உட்பட அநேக அரசு மற்றும் அரசு சாரா பங்குதாரர்கள் எந்தவொரு மாநிலத்திலும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கலாம்.[33]

நேரடியான உதவி மற்றும் பாதுகாப்பு பங்குதாரர்கள்

மாநில செயல்பாட்டாளர்களுக்குப் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பு உண்டு. அத்துடன் சமூகச் சேவை நிகழ்ச்சித் திட்டங்கள், குழந்தை பராமரிப்புச் சேவைகள், குற்றவியல் நடைமுறை நிதி, பாதிக்கப்பட்டவர்களின் நிதி, வன்முறையை அனுபவித்த பெண்களுக்கான நிதி மற்றும் பிற நிதிஆதாரங்களின் மூலமாகவும் நேரடி நிதி உதவியை அவர்கள் அளிக்கலாம். பின்வரும் மாநில செயல்பாட்டாளர்கள் குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகும்:

- காவல்துறை மற்றும் குற்றவியல் நீதி அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்களின் உடல்ரீதியான பாதுகாப்புக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்
- குடிவரவு மற்றும் தூதரக அதிகாரிகள் மாநிலத்தில்ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் தற்காலிகமாக மற்றும் நிரந்தரமாகக் குடியமரத் துணைபுரிவதில் ஈடுபடலாம்
- மாநில மருத்துவச் சேவை ஏஜென்சிகள் ஆலோசனை, தகவல், மருத்துவ, உளவியல் மற்றும் பொருள் உதவிகள் வழங்கலாம்
- மாநில சமூகச் சேவை ஏஜென்சிகள், தொழில் மற்றும் கல்விப் பயிற்சி வழங்குவதிலும், மேலும் வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளைப் பெறுவதில் உள்ள தடைகளை நீக்குவதிலும் பங்கு வகிக்கின்றன.[34]

மாநில செயல்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்தாலும், பல நாடுகளில், சிவில் சமூக அமைப்புகள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பிற மாநிலம் அல்லாத சமூக சேவை வழங்குவோர்கள் உள்ளிட்ட மாநிலம் அல்லாத செயல்பாட்டாளர்கள் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க நிதி மற்றும் பிற அழுத்தத்தின் கீழ் பாதுகாப்பு வேலையை மேற்கொள்வர்.

---

31 மக்களைக் கடத்துதல் நெறிமுறை, சட்டப்பிரிவு 6(3)-ஐப் பார்க்கவும்.
32 மக்களைக் கடத்துதல் நெறிமுறை, சட்டப்பிரிவு 6(3)-ஐப் பார்க்கவும்.
33 மேலதிக விவரங்களுக்கு, ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணுதல் பற்றிய கொள்கைக் கையேடு, பாலி செயல்முறை, 2015, பிரிவு 3.1-ஐப் பார்க்கவும். .
34 மக்களைக் கடத்துதல் நெறிமுறை, சட்டப்பிரிவு 6-ஐப் பார்க்கவும்.

- சிறப்பு மாநிலச் சேவைகளைப் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் மாநில செயல்பாட்டாளர்கள் அரசு சார்பற்ற மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு உதவிபுரியலாம்.
- அவர்கள் உறைவிடம், உணவு, சுகாதாரம் (பாலியல் சுகாதார பராமரிப்பு உட்பட) மற்றும் மருத்துவ பராமரிப்பு அத்துடன் உளவியல் ஆலோசனை, சட்ட மற்றும் குடியேற்ற ஆலோசனை போன்ற வகையில் பொருள் சார்ந்த ஆதரவையும் வழங்கலாம். அவர்களது பாதுகாப்புப் பொறுப்புகளுக்கு ஏற்ப, மாநிலம் சிவில் சமூக செயல்பாட்டாளர்களுக்கு பாதிக்கப்பட்டவர்ளைப் பாதுகாக்கப் போதுமான ஆதரவு மற்றும் நிதியுதவி வழங்க வேண்டும்.[35]
- ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்.) போன்ற சர்வதேச அமைப்புகள் நிதி மற்றும் பொருள் சார்ந்த ஆதரவை வழங்க முடியும்.[36]

திரும்ப வருதல் மற்றும் மறு ஒருங்கிணைப்பு பங்குதாரர்கள்

பாதிக்கப்பட்டவர்கள் தம் பிறந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்வதிலும், மறு ஒருங்கிணைப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பங்குதாரர்களில், குடிவரவு மற்றும் வெளியுறவு அதிகாரிகள், காவல்துறை, தூதரக விவகாரங்கள், சமூக சேவை திணைக்களங்கள், அத்துடன் பிறந்த மற்றும் செல்லுகின்ற நாடுகளின் பிற அதிகாரிகள் போன்றவர்கள் அடங்குவர். திரும்பவரும் மற்றும் பெற்றுக்கொள்ளும் மாநிலங்கள் இரண்டிலிருக்கும் இத்தகைய செயல்பாட்டாளர்கள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் திரும்புவதற்குத் தேவையான ஆவணங்களை வெளியிட வேண்டிய தேவை ஏற்படலாம்.[37] திரும்பவரும் மற்றும் பெற்றுக்கொள்ளும் மாநிலங்கள் இரண்டிலிருக்கும் அரசு முகாம்கள் அல்லது தற்காலிக உறைவிட வழங்குவோர்கள் செயல்பாட்டில் முழுமையாக ஈடுபட வேண்டிய தேவையிருக்கும். இரு மாநிலங்களிலுமுள்ள மாநில செயல்பாட்டாளர்கள் திரும்பவரும் நபரின் சமூக இணைப்புக்காக ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்த முன்னதாகவே ஒருங்கிணைக்க வேண்டிய தேவையிருக்கும். எடுத்துக்காட்டாக, தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்துறை அமைச்சகங்கள் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கலாம்.

திரும்பவருதல் மற்றும் மறு ஒருங்கிணைப்பு பற்றிய பிரச்சினைகளில் சம்பந்தப்பட்ட அரசு சாரா நிறுவனங்களில் பாதிக்கப்பட்டவர்கள், குடிபெயர்ந்தோர், பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆதரவுக் குழுக்கள் அடங்கும். புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM) மற்றும் ஐ.நா. நிறுவனங்கள் போன்ற சர்வதேச அமைப்புகள் திரும்பவரும் நடைமுறைகளை ஆதரிப்பதிலோ அல்லது கண்காணிப்பதிலோ முக்கிய பங்கு வகிக்கலாம் மற்றும் நீடித்த பாதுகாப்பு மற்றும் சமூக இணைப்புத்திட்டங்களின் உருவாக்குவதில் மாநிலங்களுக்கிடையே ஒத்துழைப்பைத் தந்து ஊக்குவிக்கலாம்.[38] அத்தகைய அரசு சாரா மற்றும் அரசுகளுக்கிடையேயான செயல்பாட்டாளர்கள் புறப்படுவதற்கு முந்தைய உதவி மற்றும் திரும்பிய பிறகு உதவி இரண்டையும் அளித்து, திரும்பவரும், மற்றும் பெற்றுக்கொள்ளும் மாநிலங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வழிவகுப்பதில் சுறுசுறுப்பாயிருக்கலாம்.

[35] ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி உதவி பற்றிய IOM கையேடு, IOM, 2007, அத்தியாயம் 4 மற்றும் தேசிய பரிந்துரைச் செயல்முறைகள், கடத்தப்பட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இணைந்த முயற்சிகள்: ஒரு செய்முறைக் கையேடு, OSCE, 2004, பக்கங்கள் 73-76-ஐப் பார்க்கவும்.

[36] தன் உலகளாவிய உதவி நிதியம் (GAF) மற்றும் பிற ஆதரவு செயல்முறைகள் மூலமாக, நாடு மற்றும் பிராந்திய அளவில் IOM, ஓர் ஆண்டில் ஏறத்தாழ 6000 – 7000 ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி உதவி வழங்குகிறது.

[37] தங்களுடைய பயணத்தைச் செயல்படுத்த மாற்று ஆவணங்களை வழங்கும் தூதரகங்கள் மற்றும் உதவித் தூதர் அலுவலகங்கள் அந்த நபரை ஒரு பாதிக்கப்பட்டவராக அல்லது கடத்தப்பட்டவராகவோ அந்த ஆவணத்தில் அடையாளம் காட்டக்கூடாது. அத்துடன் திரும்பவரும் நாட்டின் அதிகாரிகள் எந்தவிதமான தனிப்பட்ட விவரக்குறிப்புகளையும் சம்பந்தப்பட்ட நபர்களின் வெளிப்படையான அனுமதி இல்லாமல் பிறந்த நாட்டுக்கு அனுப்பக்கூடாது.

[38] ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி உதவி பற்றிய IOM கையேடு, IOM, 2007, அத்தியாயம் 3 மற்றும் தேசிய பரிந்துரைச் செயல்முறைகள், கடத்தப்பட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இணைந்த முயற்சிகள்: ஒரு செய்முறைக் கையேடு, OSCE, 2004, பக்கங்கள் 80-84-ஐப் பார்க்கவும்.

3.2. அரசியல் மட்டத்தில் ஒருங்கிணைப்பு

பல பங்குதாரர் பாதுகாப்பின் பயனுள்ள ஒருங்கிணைப்புக்கான அடித்தளம் அமைக்க அரசியல் மட்டத்தில் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. பல அரசியல் கடமைகள் சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் எதிர்வினைகளை ஒருங்கிணைக்க ஒப்பந்தங்கள் உள்ளன.

உதவிக்குறிப்பு: ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்காக தேசிய ஒருங்கிணைப்பு செயல்முறைகளை முறைப்படுத்துதல்

தேசிய ஒருங்கிணைப்பு செயல்முறைகள், அவற்றில் முறையாக இணையும்போது, எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பங்குதாரரின் குறிப்பிட்ட பாத்திரம் மற்றும் கடமைகளை விவரிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoUs) கையொப்பமிட்டு இணையும்போது பயனுள்ளதாக இருக்க அதிக வாய்ப்பு உள்ளது.

சர்வதேச அளவில், மாநிலங்கள் மக்களைக் கடத்துதல் நெறிமுறையின் அணியினர் ஆகியதால் பலமான ஒருங்கிணைந்த கடமைகளுக்காக தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இதற்கு அப்பால், வலுவான பிராந்தியக் கடமைகளும் ஏற்படுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக, தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் (ASEAN) உறுப்பினர்கள், மனிதர்களை அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலுக்கு எதிரான பிரகடனத்தில் இணைந்துள்ளனர். இந்த பிரகடனம் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுடைய உரிமைகளையும், கண்ணியத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது உட்பட கடத்தலைத் தடுக்க பிராந்திய அணுகுமுறைக்கான தேவையை வலியுறுத்துகிறது.[39] ஆள்கடத்தலுக்கு எதிரான ஒருங்கிணைந்த மெகோங் அமைச்சரவை முன்னெடுப்பு (COMMIT) 2004-இல் தொடங்கப்பட்டது. அது அகன்ற மேகோங் துணை மண்டலத்தின் கையெழுத்திட்ட அரசுகள் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு, மீட்சி மற்றும் மறு ஒருங்கிணைப்பு உட்பட ஆள்கடத்தலுக்கு எதிரான அவர்களது முயற்சிகளை ஒருங்கிணைத்து, வலுப்படுத்த உறுதியளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையெழுத்திட்டுத் தொடங்கப்பட்டது .[40] COMMIT செயல்முறையின் கீழ், கையெழுத்திட்ட அரசுகள் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப, மனிதக்கடத்தலுக்கு எதிராக ஒத்துழைக்க தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் (காவல்துறை, நீதி, சமூக சேவை மற்றும் பெண்கள் விவகாரம் உட்பட) உள்ள அரசு அதிகாரிகள் உள்ளடங்கிய தேசிய அதிரடிப்படைகள் தங்கள் நாட்டிலுள்ள கடத்தல் தடுப்புக் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களால் முடிவெடுக்கின்றன. அவை ஐ.நா. நிறுவனங்கள், புலம் பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM), சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் உட்பட அரசுத் துறைகள் மற்றும் அரசு சாரா பங்குதாரர்கள் இடையிலான கூட்டு ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தப்பட்டு, நாடு தழுவிய, இருதரப்பு மற்றும் பலதரப்பு COMMIT-இன் ஆண்டு வேலைத்திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.[41]

பாதுகாப்பு முயற்சியில் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்த அரசியல் அர்ப்பணிப்புக்கான மற்றோர் எடுத்துக்காட்டு, பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கூட்டமைப்பு (SAARC) விபச்சாரத்துக்காகப் பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலைத் தடுத்தல் மற்றும் எதிர்த்துப் போராடுவதற்கான ஒப்பந்தத்தில் காணப்படுகிறது.[42] இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், மாநிலக் குழுவினர் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பான வீடுகளை அமைக்கவும், அப்போது அரசு சாரா நிறுவனங்களின் பங்கெடுப்புக்கு அதிகாரமளிக்கவும், அங்கீகரிக்கவும் உறுதியெடுத்திருக்கின்றனர்.

தேசிய அளவில், அரசியல் ஒருங்கிணைப்பு பல வகைகளில் ஏற்படும். அதில் அரசு மற்றும் அரசு சாரா செயல்பாட்டாளர்கள் அவர்களுடைய பாதுகாப்பு செயல்பாடுகளை ஒருங்கிணைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டவைகளும் அடங்கும். அணுகுமுறைகள் மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடும். ஆனால் பொதுவாக ஒரு தேசிய ஒருங்கிணைப்பாளராக உயர்மட்ட அரசு அதிகாரி அல்லது முகவர் இருப்பார். அத்துடன் அரசு நிறுவனங்களின் மூத்த பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்களைக் கொண்ட ஒரு செயற்குழு அல்லது வட்டமேசையில் அனைவரும் ஒன்றாகப் பணிபுரிந்து, தேசியக் கொள்கை மற்றும் நடைமுறைப் பரிந்துரைகளை உருவாக்குவார்கள்.

[39] http://www.asean.org/communities/asean-political-security-community/item/asean-declaration-against-trafficking-in-persons-particularly-women-and-children-3 என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.
[40] கம்போடியா, சீனா, லாவோ பி.டி.ஆர்., மியான்மர், தாய்லாந்து மற்றும் வியட்நாம்.
[41] http://www.no-trafficking.org/commit.html-என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.
[42] பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கூட்டமைப்பு (SAARC) விபச்சாரத்துக்காகப் பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதலைத் தடுத்தல் மற்றும் எதிர்த்துப் போராடுவதற்கான ஒப்பந்தம், 2002. கையெழுத்திட்ட நாடுகளில் வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள, நேபாளம் மற்றும் இலங்கை அரசுகள் அடங்கும்.

3.3. செயல்பாட்டு மட்டத்தில் ஒருங்கிணைப்பு

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதில் பல பங்குதாரர்கள் ஈடுபட்டிருப்பதால், தேவையான உதவிகளை வழங்குவதில் பல்வேறு சேவைகளும் ஒன்றுக்கொன்று இணைந்து செயலாற்றுவதை அனுமதிக்க, ஒருங்கிணைப்பு செயல்முறைகள் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். செயல்பாட்டு மட்டத்தில் பயனுள்ள ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கவும், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு சேவைகளைப் பெற அனுமதி வழங்கவும், பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பின் குறிப்பட்ட கட்டங்களின் போது மாநிலங்கள் பல்வேறு வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றன.[43] தொடக்கத்திலேயே, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு அவர்களுடைய பாத்திரங்களையும் மற்றும் அவர்கள் வழங்கும் பாதுகாப்பு சேவைகளையும் திட்டமிட்டுத்தருவது பயனுள்ளதாக இருக்கும்.

மாநிலங்களுக்கும், மாநிலங்களல்லாத செயல்பாட்டாளர்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பு "கடத்தப்பட்ட நபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் ஊக்குவிக்கும் தங்கள் கடமைகளை, சிவில் சமூகத்தின் உத்தியுடன்கூடிய கூட்டணியில் அவர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்து, மாநில செயல்பாட்டாளர்கள் நிறைவேற்றும் ஒரு கூட்டுறவுக் கட்டமைப்பு" என்று விவரிக்கப்படுகிறது. [44] அரசியல் மட்டத்தில் பொறுப்புகள் வலுவான பாதுகாப்புக்கு ஒரு கட்டமைப்பை அளித்தாலும், அத்தகைய பொறுப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு, அரசு மற்றும் அரசு சாரா பங்குதாரர்களுக்கிடையே ஒருங்கிணைப்பை முறைப்படுத்தி, ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு சேவைகளைப் பெற அனுமதிப்பது ஒரு பொதுவான வழியாகும். இந்த வகையில் தகுந்த சேவை வழங்குபவர்களை ஒன்றாகக் கொண்டு வருவதன் மூலம், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சட்டம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைச் செயல்படுத்துவது மேம்படுத்தப்படும்

உதவிக்குறிப்பு: ஒருங்கிணைப்புச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல்

நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை உறுதி செய்யும் வகையில், மனிதக் கடத்தலைத் தடுப்பதற்கும், எதிர்த்துப் போராடுவதற்குமான எந்த தேசிய அல்லது உள்ளூர் உத்தியின் வெற்றிக்கு செயல்பாட்டு மட்டத்தில் ஒருங்கிணைப்பு ஒரு முன் நிபந்தனை ஆகும். தரமான இயக்க நடைமுறைகள் (SOPs), தவறாத கூட்டங்கள் அத்துடன் பல்வேறு பங்குதாரர்கள் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் கண்காணிப்புச் செயல்முறைகள் போன்றவை நல்ல நடைமுறை எடுத்துக்காட்டுகளாகும்.

ஒருங்கிணைப்பு செயல்முறைகள், பல பங்குதாரர்கள் பாதுகாப்பின் சிறந்த நடைமுறையின் பரிமாற்றத்தையும் அனுமதிக்கும். ஒரு அதிகார எல்லையிலிருக்கும் செயல்பாட்டாளர்கள் மற்ற அதிகார எல்லைகளிலிருக்கும் கடத்தல் தடுப்பு செயல்பாட்டாளர்களுடன் திறம்பட செயல்படுவதன் மூலம், அவை பாதுகாப்பைப் பொறுத்தவரை இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை ஆதரிக்க முடியும். இதுபோன்ற செயல்முறைகள் விசாரணை மற்றும் வழக்கை ஆதரிக்க ஒரு கருவியாகப் பயன்படுவது மட்டுமின்றி, ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதிலும் முக்கிய கவனம் செலுத்துகிறது.[45]

எல்லாவிதமான சுரண்டல் (பாலியல் மற்றும் வேலை சுரண்டல் உட்பட உறுப்புகளை அகற்றுதல் போன்ற மற்ற வகையிலும்), பாதிக்கப்பட்டவர்களின் வகைப்பாடுகள் (ஆண்கள் மற்றும் பையன்கள் அத்துடன் பெண்கள் மற்றும் சிறுமிகள் உட்பட) மற்றும் கடத்தலின் வகைகள் (உள்நாட்டு மற்றும் நாடுகடந்த கடத்தல்கள்) அனைத்தையும் கொண்டிருக்கும் அளவுக்கு ஆற்றல்மிக்க ஒருங்கிணைப்புச் செயல்முறைகள் விரிவானவை. பயனுள்ள மற்றும் திறனுள்ள ஒருங்கிணைப்பு செயல்முறைகள் தலைமைப் பண்பு மற்றும் பொறுப்புடைமை உட்பட பல்வேறு நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட பங்குகளின் தெளிவான விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை.

தேசிய உத்திகளைக் செயல்படுத்துவதை கண்காணிப்பதற்கும், அரசின் அனைத்துத் துறைகளிலும் வெளிவரும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும், குற்றவியல் நீதி, வேலைவாய்ப்பு, குடிவரவு, தொழிலாளர், தொழில்துறை, சமூக சேவைகள் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அரசுத் துறை அனைத்திலுமுள்ள பிரதிநிதிகளை ஒன்றாக இணைத்து மனிதர்களைக் கடத்துதல் பற்றிய துறைகளுக்கிடையேயான கூட்டங்கள், ஒரு பயனுள்ள செயல்முறையாக இருக்கக்கூடும். அரசு மற்றும் சிவில் சமூகம், தொழிற்சங்கம் மற்றும் தொழில்துறைப் பங்குதாரர்கள் இடையே முறையான கலந்தாலோசனைத் திட்டத்தில் பணியாற்ற தேசிய வட்டமேசை மாநாடுகள் கூட்டப்படலாம். குறிப்பிட்ட கடத்தல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ அல்லது தனிப்பட்ட நிகழ்வுகளில் செயல்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ பணிக்குழுக்களையும் உருவாக்கலாம்.

43 மனிதர்களைக் கடத்துதலில் சர்வதேச மாநிலத்துக்கு மாநிலம் நடைமுறைப்படுத்துதல், மனிதக்கடத்தல் வழக்குகளில் சர்வதேச சட்ட ஒத்துழைப்பு பற்றிய ASEAN கையேடு, தலைமைச் செயலகம், ASEAN ஆகஸ்டு 2010.

44 தேசிய பரிந்துரை செயல்முறைகள், கடத்தப்பட நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இணைந்த முயற்சிகள்: ஒரு செய்முறைக் கையேடு, OSCE/ODIHR, 2004, பக்கம் 15.

45 மனிதக் கடத்தல்: ஐரோப்பிய ஒன்றிய (EU) இயக்கம் பற்றிய இணைந்த ஐ.நா. விரிவுரை – மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை. OHCHR/UNHCR/UNICEF/UNODC/UN பெண்கள் மற்றும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, 2011, பக்கம் 50 மற்றும் OSCE பிராந்தியத்தில் தற்போதைய NRM முன்னேற்றங்கள், ODIHR, 2008-ஐப் பார்க்கவும்.

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தலில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்த அரசியல் கடமைகளைச் செயல்படுத்தல்

பயனுள்ள அரசியல் கடமைகள் (புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) உட்பட) பல முக்கியக்கூறுகளை குறிப்பிடுகிறது. அதில் பின்வருபவை அடங்கும்:

- உறுதியளித்த பங்குதாரர்கள், அவர்களது உத்தரவுகள் மற்றும் அவர்கள் செயல்படும் பகுதிகள்
- அடிப்படைக் கொள்கைகள் மற்றும் ஒத்துழைப்பின் நோக்கம்
- பொறுப்பிலிருந்து நன்மையடைந்த இலக்குக் குழுக்கள்
- பாதுகாப்பான மற்றும் இரகசியத் தகவல் தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்ற ஏற்பாடுகள்
- ஒத்துழைப்பு நடைமுறைகள்
- சிறு வயதினர்களுக்குப் பொருத்தமான நடவடிக்கைகள்

நடைமுறையில், பங்குதாரர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க பின்வரும் நடவடிக்கைகளை எடுத்திருக்கும் பட்சத்தில், அரசியல் கடமைகள் நடைமுறைப்படுத்தப்படும்:

* அரசியல் கடமைகள் போதுமான நிதிப் பொறுப்புகளால் ஆதரவளிக்கப்படுகின்றன
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள், அவர்களுடைய புலம்பெயர்தல் நிலை என்னவாக இருந்தாலும் அல்லது அவர்களுடைய கடத்தலின் விளைவாக அவர்கள் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும், ஆரம்ப உதவி மற்றும் பாதுகாப்பு நோக்கத்திற்காக குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் போல கருதப்படுவார்கள்
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யூகிக்கப்படுகிறவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவுக்கான வாய்ப்புகளை அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில், வாய் வழியாகவும், எழுத்து மூலமும் தெரிவிக்கப்படும்
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யூகிக்கப்படுகிறவர்களுக்குச் சிந்தனைக்கான காலத்தை அளிக்க வேண்டும்
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யூகிக்கப்படுகிறவர்களுக்கு, அவர்களுடைய புலம்பெயர்தல் நிலை அல்லது குற்றவியல் நீதி விசாரணையில் பங்கேற்க விருப்பம் என்னவாக இருந்தாலும், பாதுகாப்பான உறைவிடம் மற்றும் தேவையான ஆதரவுச் சேவைகள் கிடைக்க வழிவகை செய்யப்படும்.
* சம்பந்தப்பட்ட மாநில மற்றும் அரசு சாரா அமைப்பு பாதுகாப்புப் பங்குதாரர்கள் குற்றவியல் நீதி அதிகாரிகளுடன் ஒத்துழைக்க முடிவு செய்திருக்கும் அல்லது பிறந்த நாட்டுக்கு திரும்ப முடிவெடுத்திருக்கும் மக்களைப் பாதுகாப்பதில் ஆலோசனை செய்வர்
* மாநில மற்றும் அரசு சாரா அமைப்பு பங்குதாரர்கள் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யூகிக்கப்படுகிறவர்கள், ஆள்கடத்தல்காரர்களால் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கிறார்களா என்பதைப் பற்றி ஒருவருக்கொருவர் கலந்து ஆலோசிப்பார்கள்
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யூகிக்கப்படுகிறவர்களுக்கு எதிர்கால சட்டபூர்வ நடவடிக்கைகளைப் பற்றி அவர்கள் புரிந்துகொள்ளும் மொழியில், வாய் வழியாகவும், எழுத்து மூலமும் தெரிவிக்கப்படும்
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் என்று யூகிக்கப்படுகிறவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு முன்னும், பின்னும், அவை நடக்கும் போதும், சேவை வழங்குவோர்கள் இணைந்து உடன் வருவார்கள்
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு வழங்கல் மற்றும் நிதி உதவி, அல்லது அனுபவித்த காயம், இழப்பு அல்லது தீங்கினை ஏற்றுக்கொண்டு இழப்பைச் சரிசெய்தல் மூலமாக ஆதரவைப் பெறுவார்கள்.
* ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுடைய நீடித்த சமூக மற்றும் பொருளாதார மறு ஒருங்கிணைப்புக்கு ஆதரவளிக்க மற்றும் எதிர்த்தாக்குதல், மறு கடத்தல் போன்ற அபாயங்களைக் குறைக்க, குற்றவியல் நீதி செயல்முறை முடிந்தவுடன் அவர்களின் பாதுகாப்புத் தேவைகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

பிரிவு 4:

ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான உதவிக்குறிப்புகளின் தொகுப்பு

✓ **ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க முக்கியக் கொள்கைகளைப் பின்பற்றுதல்:**

- பாதிக்கப்பட்டவர்களைக் கைது செய்யவோ, குற்றம் பதிவு செய்யவோ அல்லது மாநிலத்தில் முறையில்லாமல் நுழைந்ததற்காக அல்லது தங்கியிருப்பதற்காக அல்லது கடத்தப்பட்டதன் நேரடி விளைவாக செய்த குற்றங்களுக்காக தண்டிக்கப்படவோ கூடாது
- பாதிக்கப்பட்டவர்கள் போதுமான உடல்ரீதியான மற்றும் உளவியல்ரீதியான பராமரிப்புக்கு அனுமதிக்கப்பட வேண்டும்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு குற்றவியல், சிவில் அல்லது பிற நடவடிக்கைகள் மூலம் சட்ட மற்றும் பிற உதவிகள் வழங்கப்பட வேண்டும்
- ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, அவர்களின் சிறப்பு பாதிப்புத்தன்மைகள், உரிமைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப தேவையான உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பான (மற்றும் சாத்தியப்பட்டால், சுயவிருப்பத்தோடு) திரும்புவதற்கான உத்தரவாதம், திரும்பவரும் மற்றும் பிறந்த மாநிலங்களால் தரப்பட வேண்டும்
- பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயனுள்ள, தகுந்த சட்டத் தீர்வுகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

✓ சர்வதேச சட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்: மக்களைக் கடத்துதல் நெறிமுறையை வழங்குவதற்குரிய குறைந்தபட்ச தரத்துக்கும் மேல் செல்லும், எடுத்துக்காட்டாக, கிரிமினல் வழக்குகளுக்கும் அப்பால் மற்றும் அத்துடன் கூட இழப்பீட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்யும் மற்ற மாநிலங்களின் முன்மாதிரியைப் பின்பற்றுமாறு மாநிலங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

✓ பாதுகாப்புக்கான அணுகுமுறைகள் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளல்: பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் பாதுகாப்பு அத்துடன் அவர்களைப் பற்றிய இரகசியத் தகவல்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு, ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் அணுகுமுறைகள் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பாரபட்சமற்ற அடிப்படையில் இருக்க வேண்டும். அத்துடன் அரசு சாரா சிறப்பு நிறுவனங்களுடன் பயனுள்ள ஒத்துழைப்பு மூலம், பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப, நெகிழ்வுத் தன்மையுடன் மாற்றியமைக்கப்படத்தக்க விதத்தில் இருக்க வேண்டும்

✓ பாதிக்கப்பட்டவர்கள் ஒத்துழைத்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களைப் பாதுகாத்தல்: பாதிக்கப்பட்டவர்களை, அவர்களது புலம்பெயர்தல் அல்லது பிற அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் மற்றும் குற்றவியல் நீதி நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான அவர்களது விருப்பம் எதுவாக இருந்தாலும்,மாநிலங்கள் பாதுகாக்க வேண்டிய தங்கள் பொறுப்புகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

✓ ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிந்தனைக்கான நேரத்தைக் கொடுத்தல்: தங்களுடைய அனுபவங்களிலிருந்து மீள ஆரம்பிக்க உதவும் வகையில் ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிந்தனைக்கான நேரத்தைக் கொடுக்கவும். ஆள்கடத்தல்காரர்களுக்கு எதிராகக் குற்றவியல் நீதி செயல்முறையில் பங்கேற்க பாதிக்கப்பட்டோருக்கு விருப்பமிருக்கிறதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், நாடுகடந்த ஆள்கடத்தலால் பாதிக்கப் பட்டவர்களுக்குத் தற்காலிக விசா உட்பட சிந்தனைக்கான நேரங்கள் மற்றும் அது தொடர்பான ஆதரவு போன்றவை வழங்கப்பட வேண்டும்.

✓ மனிதர்களைக் கடத்துதலில் பாதிக்கப்பட்டவர்களைச் சிறந்த நடைமுறைக்கு ஏற்ப பாதுகாத்தல்: மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR) மனித உரிமைகள் மற்றும் மனிதக் கடத்துதல் தொடர்பான பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள், மாநிலங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுக்கு இடையேயான மற்றும் அரசு சாரா அமைப்புகள் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளுமாறு, வழிகாட்டுதல் 6 அறிவுறுத்துகிறது:

- பாதிக்கப்பட்டவர்கள் எந்தவிதமான குடிவரவு அல்லது பிற தடுப்புக்காவலில் வைக்கப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளல்
- பாதிக்கப்பட்டவர்கள் எந்தவிதப் பாதுகாப்பு அல்லது உதவிச் சேவைகளைப் பெறச் சம்மதம் கொடுக்காத பட்சத்தில், ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளல்
- தங்களுடைய நாட்டின் மாநிலத்தைச் சேர்ந்த இராஜாங்க மற்றும் தூதரகப் பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்ளக்கூடிய அவர்களுடைய உரிமைகளை பாதிக்கப்பட்டவர்களுக்குத் தெரிவித்தல்
- பாதிக்கப்பட்டவர்களின் அந்தரங்க உரிமையை மதிப்பது மற்றும் அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் இருப்பது உட்பட பாதிக்கப்பட்டவர்களை ஆள்கடத்தல்காரர்களிடமிருந்து வரும் அச்சுறுத்தல்கள், தீங்கு அல்லது எதிர்த்தாக்குதல் போன்றவைகளில் இருந்து பாதுகாத்தல்.

✓ குற்றவியல்நீதி செயல்முறை முழுவதும் அபாய மதிப்பீடுகளைச் செய்தல்: பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்புத் தேவைகள் விசாரணைகளுக்குமுன், விசாரணைகளின்போது மற்றும் விசாரணைகளுக்குப்பின் மாறுபடும். அதன்படி, மாநிலங்கள் அபாய மதிப்பீடுகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் அவர்களின் மாறும் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்ப திறம்பட தீர்வுகாண்கிறதா என்பதை செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் உறுதி செய்வது சிறந்த நடைமுறையாகும்.

✓ மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் விசாரணைக்கு முந்தைய ஆதரவை வழங்குதல்: மனிதர்களைக் கடத்துதல் நெறிமுறையின் பாதுகாப்பு ஏற்பாடுகள், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் விசாரணைக்கு முந்தைய ஆதரவுக்கான குறைந்தபட்ச தரங்களை வரையறுக்கின்றன. அந்த ஆதரவை வழங்குவதில் ஒரு முறைசார்ந்த வழிமுறையை மாநிலங்கள் வைத்திருக்க வேண்டும். திறமையான அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் குற்றவியல் நீதி அமைப்பைப் புரிந்து கொண்டிருக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குவதில் சிறப்பு பயிற்சி பெற்றிருக்கும் சிவில் சமுதாய அமைப்புகள் அத்தகைய ஆதரவுச் சேவைகளை வழங்குவதில் உதவ முடியும்.

✓ குற்றவியல் நீதி செயல்முறை முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தருதல்: நீதிமன்ற நடவடிக்கைகளில் சாட்சிகளாக இருப்பவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் புரியும்படியான மொழியில், அவர்களுக்கான விருப்பத்தின்படி, முழுமையான தகவல்களை மாநிலங்கள் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களின் சட்ட உரிமைகள் மற்றும் கடமைகளைப் புரிந்துகொள்ள உதவிடும் வகையில் சுயேச்சையான சட்ட ஆலோசகரைச் சந்திப்பதற்கான வாய்ப்பை, மாநிலங்கள் வழங்க முயல வேண்டும்.

- ✓ ஆள்கடத்தலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், குழந்தை சாட்சிகளையும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் வைத்திருத்தல்: தாக்குதலுக்கு ஆளாகக்கூடிய நபர்களின் பாதுகாப்புக்காக, நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூல சாதனங்கள், பாதிக்கப்பட்ட குழந்தைக்கும் தானாகக் கிடைக்கும்படி உருவாக்க மாநிலங்கள் கருத்தில் கொள்ளலாம். பிரதான சாட்சியாக, பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும்/ அல்லது குழந்தை சாட்சிகளின் காவல்துறை நேர்முக காணொளிப் பதிவுகளை சமர்ப்பதை அனுமதிப்பது போன்ற கூடுதல் பாதுகாப்புகளையும் கருத்தில் கொள்ளலாம். இருப்பினும், பாதிக்கப்பட்ட குழந்தைகள், குறிப்பாக அவர்கள் தீவிர அதிர்ச்சிக்கு ஆளாயிருந்தால், பங்கேற்கத் தேவையில்லை.

- ✓ உதவியும், பாதுகாப்பு நடவடிக்கைகளும் பங்கேற்பதற்கான ஊக்குதல்கள் இல்லை என்பதை உறுதிசெய்தல்: குற்றவிசாரணை வழக்கை அடியோடு தகர்க்கும் எந்த வடிவிலான ஊக்குதலும் இல்லை என்ற வகையில் உதவியும், பாதுகாப்பு நடவடிக்கைகளும் வழங்கப்பட வேண்டும். சாட்சிகளுக்கு வழங்கப்படுவதெல்லாம், எடுத்துக்காட்டாக, உறைவிடம் மற்றும் விசா உட்பட எதுவும் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் நியாயமான முறையில் இருக்க வேண்டும், அத்துடன் ஆதரவைத் தவறாகப் பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டால், உடனடியாக கவனிக்கப்பட வேண்டும்.

- ✓ நீடித்த பாதுகாப்புத் தீர்வுகளின் ஒரு பகுதியாக பயனுள்ள இழப்பீடு வழங்குதல்: குற்றவியல் நீதி விசாரணைகளின் வெளியே ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கும் இழப்பீட்டுக்கான ஆதாரவளங்களை உருவாக்க மாநிலங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்ட குடிமக்கள் அல்லாதவர்களுக்கு இழப்பீடு கிடைத்துள்ளதா என்பதை உறுதிசெய்வதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

- ✓ ஆள்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்காக தேசிய ஒருங்கிணைப்பு செயல்முறைகளை முறைப்படுத்துதல்: தேசிய ஒருங்கிணைப்பு செயல்முறைகள், அவற்றில் முறையாக இணையும்போது, எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பங்குதாரரின் குறிப்பிட்ட பாத்திரம் மற்றும் கடமைகளை விவரிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) வழியாக இணையும்போது, பயனுள்ளதாக இருக்க அதிக வாய்ப்பு உள்ளது.

- ✓ ஒருங்கிணைப்புச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல்: நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை உறுதி செய்யும் வகையில், மனிதக் கடத்தலைத் தடுப்பதற்கும், எதிர்த்துப் போராடுவதற்குமான எந்த தேசிய அல்லது உள்ளூர் உத்தியின் வெற்றிக்கு செயல்பாட்டு மட்டத்தில் ஒருங்கிணைப்பு ஒரு முன் நிபந்தனை ஆகும். தரமான இயக்க நடைமுறைகள், தவறாத கூட்டங்கள் அத்துடன் பல்வேறு பங்குதாரர்கள் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் கண்காணிப்புச் செயல்முறைகள் போன்றவை நல்ல நடைமுறை எடுத்துக்காட்டுகளாகும்.

Regional Support Office
THE BALI PROCESS

தொடர்பு கொள்ள
வட்டார ஆதரவு அலுவலகம் – பாலி செயல்முறை
27-ஆவது மாடி ராஜநகர்ன் கட்டிடம்
3 தெற்கு சதோர்ன் சாலை, சதோர்ன் பாங்காக் 10120
தாய்லாந்து தொலைபேசி +66 2 343 9477
தொலைநகல் +66 2 676 7337
info@rso.baliprocess.net

The Bali **Process**

on People Smuggling, Trafficking in Persons and Related Transnational Crime

http://www.baliprocess.net